**11.08.2025ம் தேதிய அவசரக்கூட்ட தீர்மானம் எண்: 299ன் உண்மை நகல்**

திருநெல்வேலி மாநகராட்சியின் 2024-2025-ம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கை மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

**அலுவலகக்குறிப்பு :**

திருநெல்வேலி மாநகராட்சியின் 2024-2025ம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கையினை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**ந.க.எண் : சி1/ 2319 /2025-**

தீர்மாணம் : பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.

**(ஒம்)கோ.ராமகிருஷ்ணன்**
**மேயர்**
**திருநெல்வேலி மாநகராட்சி**

**/உ.ந.உ.ப.அ/**

**கண்காணிப்பாளர்**
**திருநெல்வேலி மாநகராட்சி**

# திருநெல்வேலி மாநகராட்சி

# நிர்வாக அறிக்கை

# 2024-2025

# திருநெல்வேலி மாநகராட்சி

## 2024-2025-ம் ஆண்டின் திருநெல்வேலி மாநகராட்சியின் ஆட்சி அறிக்கை

### அ.பொது அறிக்கை

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண். 110 நாள் 31.3.1994-ன்படி திருநெல்வேலி, பாளையங்கோட்டை, மேலப்பாளையம் ஆகிய மூன்று நகராட்சிகளையும், தச்சநல்லூர் நகர பஞ்சாயத்தும், அழகநேரி. வெள்ளக்கோவில், சேந்திமங்கலம், திருவண்ணாதபுரம், பாளையங்கோட்டூர், கரையிருப்பு, திம்மராஜபுரம், வி.எம்.சத்திரம், மேலநத்தம், கருப்பன்துறை, கண்டியப்பேரி ஆகிய 11 பஞ்சாயத்து பகுதி முழுவதும் மற்றும் ரெட்டியார்பட்டி பஞ்சாயத்தில் வெங்கழுநீர் சமுத்திரம் கிராமம், கொக்கத்திகுளம் கிராமம், நொச்சிகுளம் பஞ்சாயத்தில் ராஜகோபாலபுரம் கிராமம், திருப்பணிகரிசல்குளம் பஞ்சாயத்தில் கருவேலன்குளம் கிராமம், வாகைக்குளம் கிராமம், நரசிங்கநல்லூர் பஞ்சாயத்து பகுதியில் நரசிங்கநல்லூர் பஞ்சாயத்து சர்வே எண்கள் 84 முதல் 111, 113 முதல் 116, 434 முதல் 481 ஆகியவைகளை ஒருங்கிணைத்து திருநெல்வேலி மாநகராட்சி தோற்றுவிக்கப்பட்டது. பின்னர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அரசாணை எண். 152 நாள் 01.06.1994-ன்படி 1.6.1994 முதல் திருநெல்வேலி மாநகராட்சியாக செயல்பட்டு வருகின்றது.

புவியியலார் கூற்றுப்படி திருநெல்வேலி மாநகராட்சி கடல் மட்டத்தில் இருந்து 36 மீட்டர் உயரத்திலிருக்கின்றது.

**எல்லைப் பரப்பும் மக்கள் தொகையும்**

மாநகரின் மொத்தப் பரப்பளவு 108.65 ச.கி.மீ. இதன் மக்கள் தொகை 1991-ன் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 368550 ஆகும். 1997-ன் இதன் இடைக்கால மக்கள் தொகை 408900 ஆகும். 2001-ன் மக்கள் தொகை 4,11,831. இதில் ஆண்கள் 2,03,232 பெண்கள் 2,08,599 ஆகும். 2011-ன் மக்கள் தொகை 474838 இதில் ஆண்கள் 234639 பெண்கள் 240195 இதரவை 4 ஆகும்.

**மன்றத்தின் வளர்ச்சி நிலை.**

மாநில தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்டுள்ள நெறிமுறைகளைக் கடைபிடித்து 19.02.2022ல் வார்டு உறுப்பினர்களுக்கான தேர்தல் நடத்தப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் 02.03.2022ம் தேதி பதவி பிரமாணம் எடுத்துக்கொண்டனர். பின்னர் 04.03.2022ம் தேதி அன்று நடைபெற்ற மறைமுக தேர்தலில் மாநகராட்சியின் மேயராக திரு.பி.எம்.சரவணன்,பி.ஏ., அவர்களும், துணை மேயராக திரு.கே.ராஜீ அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு 04.03.2022ம் தேதியில் பதவி ஏற்றுக் கொண்டனர். 05.08.2024-ம் தேதி அன்று நடைபெற்ற மறைமுக தேர்தலில் மாநகராட்சியின் மேயராக திரு.கோ.ராமகிருஷ்ணன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு 10.08.2024-ம் தேதியில் பதவி ஏற்றுக் கொண்டார்.

திரு.தாக்கரே சுபம் ஞானதேவ்ராவ், இ.ஆ.ப. அவர்கள், 01.04.2024 முதல் 19.07.2024 முடிய ஆணையாளராக பணிபுரிந்துள்ளார்.

திரு.ஆ.தாணுமூர்த்தி, துணை ஆணையாளர் அவர்கள் 20.07.2024 முதல் 24.07.2024 முடிய ஆணையாளர் (கூடுதல் பொறுப்பு) ஆக பணிபுரிந்துள்ளார்.

திரு. என்.ஓ.சுகபுத்ரா, ஆணையாளர், இ.ஆ.ப. அவர்கள் 25.07.2024 முதல் 31.03.2025 முடிய ஆணையாளராக பணிபுரிந்துள்ளார்.

| வ.எண் | 1996-ல் நடந்த தேர்தலில் வார்டுகளும் அது ஒதுக்கப்பட்டுள்ள விபரங்களும் | 2001ல் நடந்த தேர்தலில் வார்டுகளும் அது ஒதுக்கப்பட்டுள்ள விபரங்களும் |
|---|---|---|
| 1. | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் - பொது ___ 4 | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் - பொது ___ 4 |
| 2. | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் - பெண்கள் - 2 | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் - பெண்கள் - 2 |
| 3. | பெண்கள் - 17 | பெண்கள் - 17 |
| 4. | பொது - 32 | பொது - 32 |
| 5. | மொத்தம் - 55 | மொத்தம் - 55 |
| வ.எண் | 2006ல் நடந்த தேர்தலில் வார்டுகளும் அது ஒதுக்கப்பட்டுள்ள விபரங்களும் | 2011ல் நடந்த தேர்தலில் வார்டுகளும் அது ஒதுக்கப்பட்டுள்ள விபரங்களும் |
| 1. | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் - பொது ___ 4 | வ.மேயர் - பெண்கள் பொது ___ 1 |
| 2. | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் - பெண்கள் - 3 | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் - பொது ___ 4 |

| | | |
|---|---|---|
| 3. | பெண்கள் - 16 | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் - பெண்கள் - 3 |
| 4. | பொது - 32 | பெண்கள் - 16 |
| 5. | மொத்தம் - 55 | பொது —— 32 |
| | | மொத்தம் - 55 |

| 2022ல் நடந்த தேர்தலில் வார்டுகளும் அது ஒதுக்கப்பட்டுள்ள விபரங்களும் |
|---|
| வ.மேயர் - பொது |
| தாழ்த்தப்பட்ட வகுப்பினர் - பொது —— 3 |
| தாழ்த்தப்பட்ட வகுப்பினர் - பெண்கள் - 4 |
| பெண்கள் (பொது) - 24 |
| பொது - 24 |
| மொத்தம் - 55 |

**மாநகராட்சியின் தகுதி நிலை**

திருநெல்வேலி மாநகராட்சியானது 24.08.1987ம் தேதி நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை அரசாணை எண்: 828ன் படி சிறப்பு நிலை நகராட்சியாக செயல்பட்டு வந்தது. அரசு தனது 22.11.1993-ம் தேதிய ஆணை எண்: 260-ல் இந்நகராட்சியுடன், அருகிலுள்ள பாளையங்கோட்டை நகராட்சி, மேலப்பாளையம் நகராட்சி, தச்சநல்லூர் டவுண் பஞ்சாயத்து மற்றும் 11 பஞ்சாயத்துக்களை உள்ளடக்கி மாநகராட்சியாக உயர்த்த ஆட்சேபனைகள் கோரப்பட்டு 31.03.1994-ம் தேதிய ஆணை எண்: 110ன் படி ஒரே நகராட்சியாக உருவாக்கி 01.06.1994 முதல் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை ஆணை எண்: 152, நாள்: 01.06.1994-ல் மாநகராட்சியாக அறிவித்து தனி அதிகாரியினை நியமித்து 01.06.1994 முதல் மாநகராட்சியாக செயல்பட்டு வருகின்றது.

**மன்றக் கூட்டங்கள்**

தேர்ந்தெடுக்கப்பட்ட மேயர், துணை மேயர் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் விபரம்

| | |
|---|---|
| மாமன்றத் தலைவர் | 1.திரு.பி.எம்.சரவணன்<br>01.04.2024 முதல் 02.07.2024<br>2.திரு.கே.ராஜ்,<br>மாமன்றத் தலைவர் (பொ)<br>03.07.2024 முதல் 09.08.2024<br>3. திரு.கோ. ராமகிருஷ்ணன்<br>10.08.2024 முதல் நாளது வரை |
| துணை மேயர் | திரு.கே.ராஜ் |

| வார்டு எண் | உறுப்பினர் பெயர் | |
|---|---|---|
| 1 | திரு.கே. ராஜீ (துணை மேயர்) | பொது |
| 2 | திருமதி.மு. முத்துலெட்சுமி | பெண்கள் (பொது) |
| 3 | திரு.பூ சுப்பிரமணியன் | பொது |
| 4 | திருமதி.ஜெ. வசந்தா | எஸ்.சி.(பெண்) |
| 5 | திரு.வி.ஜெகநாதன் | எஸ்.சி.(பொது) |
| 6 | திரு.வி.பவுல்ராஜ் | பொது |
| 7 | திருமதி.எம். இந்திரா | பெண்கள் (பொது) |
| 8 | திருமதி.கே. மேரி | பெண்கள் (பொது) |
| 9 | திருமதி.கே. சுப்புலெட்சுமி | பெண்கள் (பொது) |
| 10 | திருமதி.எம். ரேவதி | எஸ்.சி.(பெண்) |
| 11 | திரு.ச. கந்தன் | பொது |
| 12 | திருமதி.கோகுலவாணி | பெண்கள் (பொது) |
| 13 | திரு.ந. சங்கர்குமார் | பொது |
| 14 | திருமதி.ஆர். கீதா | எஸ்.சி.(பெண்) |
| 15 | திரு.ர. அஜய் | எஸ்.சி.(பொது) |
| 16 | திரு.பி.எம்.சரவணன் | பொது |
| 17 | திருமதி.செ.மகேஸ்வரி | பெண்கள் (பொது) |
| 18 | திரு.மு.சுப்பிரமணியன் | பொது |
| 19 | திரு.அ.அல்லாபிச்சை | பொது |
| 20 | திரு.அ. ஷேக்மன்சூர் | பொது |
| 21 | திருமதி.இ. ராஜேஸ்வரி | பெண்கள் (பொது) |
| 22 | திரு.பா. மாரியப்பன் | பொது |
| 23 | திருமதி.அ. அனார்கலி | பெண்கள் (பொது) |
| 24 | திரு.அ. ரவிந்தர் | பொது |
| 25 | திரு.கோ. ராமகிருஷ்ணன் (மேயர்) | பொது |
| 26 | திருமதி.பொ. பிரபாசங்கரி | பெண்கள் (பொது) |
| 27 | திரு.ச. உலகநாதன் | பொது |
| 28 | திரு.எம்.சந்திரசேகர் | பொது |

| | | |
|---|---|---|
| 29 | திருமதி.எம். சுதா | பெண்கள் (பொது) |
| 30 | திரு.பூ. ஜெகநாதன் | பொது |
| 31 | திருமதி.எஸ்.அமுதா | பெண்கள் (பொது) |
| 32 | திருமதி.எஸ். அனுராதா | பெண்கள் (பொது) |
| 33 | திருமதி.லெட்சுமிஉமாபதிசிவன் | பெண்கள் (பொது) |
| 34 | திருமதி.மு.க. ஷர்மிளா | பெண்கள் (பொது) |
| 35 | திருமதி.சு. பேச்சியம்மாள் | பெண்கள் (பொது) |
| 36 | திருமதி.கி. சின்னதாய் | எஸ்.சி.(பெண்) |
| 37 | திரு.மா.பிரான்சிஸ் | பொது |
| 38 | திருமதி.மு.பாலம்மாள் | பெண்கள் (பொது) |
| 39 | திருமதி.பா. சீதா | பெண்கள் (பொது) |
| 40 | திரு.பி. வில்சன்மணிதுரை | பொது |
| 41 | திருமதி.ஜெ.சங்கீதா | பெண்கள் (பொது) |
| 42 | திரு.பொன்மாணிக்கம் | பெண்கள் (பொது) |
| 43 | திரு.க. சுந்தர் | எஸ்.சி.(பொது) |
| 44 | திரு.எம்.எஸ்.முகைதீன் அப்துல்காதர் | பொது |
| 45 | திருமதி.கதிஜாஇக்லாம்பாசிலா | பெண்கள் (பொது) |
| 46 | திரு.ரம்ஜான்அலி | பொது |
| 47 | திருமதி.ஷபிஅமீர்பாத்து | பெண்கள் (பொது) |
| 48 | திருமதி. ஆமீனாபீவி | பெண்கள் (பொது) |
| 49 | திரு.அலிஷேக்மன்சூர் | பொது |
| 50 | திரு.ரசூல்மைதீன் | பொது |
| 51 | திருமதி.சகாயஜீலியட்மேரி | பெண்கள் (பொது) |
| 52 | திரு.செ. நித்யபாலையா | பொது |
| 53 | திருமதி.மு. அம்பிகா | பெண்கள் (பொது) |
| 54 | திரு.கே.கே.கருப்பசாமி | பொது |
| 55 | திரு.இரா.முத்துசுப்பிரமணியன் | பொது |

**அறிக்கையாண்டில் 01.04.2024 முதல் 31.03.2025 முடிய நடைபெற்ற சாதாரண மற்றும் அவசரக் கூட்ட விபரங்கள் மன்றத்தில் வைக்கப்பட்டு முடிவு செய்யப்பட்ட பொருள் விபரம்**

| வருடம் | தேதி | சாதாரண கூட்டம் | அவசர கூட்டம் | சிறப்புக் கூட்டம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| ஜீலை“2024 | 08.07.2024 | | | 1 | 1 |
| ஜீலை “2024 | 15.07.2024 | 145 | 62 | | 207 |
| ஆகஸ்ட்“2024 | 29.08.2024 | 35 | 11 | | 46 |
| செப்டம்பர்“2024 | 30.09.2024 | 19 | 24 | | 43 |
| அக்டோபர் “ 2024 | 28.10.2024 | 9 | 26 | | 35 |
| டிசம்பர் “2024 | 30.12.2024 | 10 | 29 | | 39 |
| ஜனவரி“2025 | 30.01.2025 | 9 | 20 | | 29 |
| பிப்ரவரி“2025 | 27.02.2025 | 6 | 55 | | 61 |
| மார்ச்“2025 | 26.03.2025 | 0 | 0 | 1 | 1 |
| | | 233 | 227 | 2 | 462 |

1) மொத்தக் கூட்டம் – 14
2) சாதாரண கூட்டம் – 7
3) அவசரக் கூட்டம் – 7
4) சிறப்புக் கூட்டம் – 2

மன்றத்திற்கு வைக்கப்பட்ட மொத்த பொருள்கள் – 462
மன்றத்தில் முடிவு எடுக்கப்பட்டவை – 462
நிலுவையில் உள்ள மன்ற பொருட்கள் – –

| | நியமனக்குழு கூட்டங்கள் | மாமன்ற மேல்முறையீடு குழு கூட்டங்கள் |
|---|---|---|
| நடைபெற்ற கூட்டங்கள் | – | 1 |
| வைக்கப்பட்ட பொருட்கள் | – | 1 |
| ஆய்வு செய்து முடிக்கப்பட்டவை | – | 1 |
| நிலுவையில் உள்ளவை | – | – |

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அரசு ஆணை எண்: 241 நாள்: 01.10.1996-ன் படி நிர்வாக வசதிகளுக்காக இம்மாநகராட்சி நான்கு மண்டல

அலுவலகங்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வார்டு அலுவலகமும் ஒரு உதவி ஆணையரின் கீழ் இயங்கி வருகின்றது. மேலும் அந்தந்த வார்டு அலுவலக பகுதிகளில் உள்ள உறுப்பினர்கள் தங்களில் ஒருவரை வார்டுக்குழு தலைவராகத் தேர்ந்தெடுத்து அவரின் கீழ் வார்டு குழு கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

07.02.1997 தேதிய ந.நி.கு.வ.துறை அரசு ஆணை எண்: 27-ன் படி தேர்ந்தெடுக்கப்பட்ட மாமன்றத்திற்கு உதவிட மாமன்றம் 12.02.1997 தேதிய தீர்மானம் எண்: 2176-ல், ஒன்பது உறுப்பினர்கள் அதில் 3-ல் ஒரு பங்கு பெண்களைக் கொண்ட 6 நிலைக்குழுவினை நிறுவி தீர்மானித்துள்ளது. தமிழ்நாடு அரசிதழ் சிறப்பு வெளியீடு எண் 545, நாள் 22.11.2021-ன்படி மகளிருக்கு 50% க்கு குறையாமல் இட ஒதுக்கீடு வழங்க ஆணையிடப்பட்டுள்ளதன்படி, திருநெல்வேலி மாமன்றத தீர்மான எண் 170 நாள் 24.01.2022-ல் ஒவ்வொரு நிலைக்குழுவிலும் 5 பெண் மற்றும் 4 ஆண் உறுப்பினர் ஆக மொத்தம் 9 உறுப்பினர்கள் என்ற அடிப்படையில் 6 நிலைக்குழுக்கள் அமைக்க தீர்மானிக்கப்பட்டது. அதன்படி நிலைக்குழு தேர்தல் 30.03.2022, 31.03.2022 ஆகிய தேதிகளில் நடைபெற்று உறுப்பினர்களும் அதன் தலைவர்களும் தேர்வு செய்யப்பட்டனர். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட நிலைக்குழு தலைவர்களும், உறுப்பினர்களும் விபரங்கள் இதனடியில் கொடுக்கப்பட்டுள்ளது.

## 1. கணக்கு குழு தலைவர் மற்றும் உறுப்பினர்கள்

| வார்டு எண் | உறுப்பினர் பெயர் | வார்டு எண் |
|---|---|---|
| 1 | திரு.ந.சங்கர்குமார், தலைவர் | 13 |
| 2 | திரு. வி. ஜெகநாதன் உறுப்பினர் | 5 |
| 3 | திருமதி. மு. இந்திரா உறுப்பினர் | 7 |
| 4 | திரு. ர. அஜய் உறுப்பினர் | 15 |
| 5 | திரு.அ.அல்லாபிச்சை உறுப்பினர் | 19 |
| 6 | திருமதி.இ.ராஜேஸ்வரி உறுப்பினர் | 21 |
| 7 | திருமதி மு. க. ஷர்மிளா உறுப்பினர் | 34 |
| 8 | திருமதி. கி. சின்னத்தாய் உறுப்பினர் | 36 |
| 9 | திருமதி. பா. சீதா உறுப்பினர் | 39 |

## 2.கல்விக்குழு தலைவர் மற்றும் உறுப்பினர்கள்

| வார்டு எண் | உறுப்பினர் பெயர் | வார்டு எண் |
|---|---|---|
| 1 | திரு.வி. பவுல் ராஜ் தலைவர் | 6 |
| 2 | திரு. வி.ஜெகநாதன் உறுப்பினர் | 5 |
| 3 | திருமதி. கே. மேரி உறுப்பினர் | 8 |
| 4 | திருமதி. ஆர்.கீதா உறுப்பினர் | 14 |
| 5 | திரு. மு. சுப்பிரமணியன் உறுப்பினர் | 18 |
| 6 | திருமதி. மு. க. ஷர்மிளா உறுப்பினர் | 34 |
| 7 | திருமதி. சு.பேச்சியம்மாள் உறுப்பினர் | 35 |
| 8 | திருமதி. கி. சின்னத்தாய் உறுப்பினர் | 36 |
| 9 | திரு.க. சுந்தர் உறுப்பினர் | 43 |

## 3.சுகாதாரக் குழு தலைவர் மற்றும் உறுப்பினர்கள்.

| வார்டு எண் | உறுப்பினர் பெயர் | வார்டு எண் |
|---|---|---|
| 1 | திரு.ரம்ஸான் அலி தலைவர் | 46 |
| 2 | திருமதி. கே. சுப்புலெட்சுமி உறுப்பினர் | 9 |
| 3 | திரு. ர.அஜய் உறுப்பினர் | 15 |
| 4 | திரு. அ. ஷேக் மன்சூர் உறுப்பினர் | 20 |
| 5 | திரு. பா. மாரியப்பன் உறுப்பினர் | 22 |
| 6 | திருமதி. மு. பாலம்மாள் உறுப்பினர் | 38 |
| 7 | திருமதி. பா. சீதா உறுப்பினர் | 39 |
| 8 | திருமதி. ஷபி அமீர் பாத்து உறுப்பினர் | 47 |
| 9 | திருமதி. மு. அம்பிகா உறுப்பினர் | 53 |

## 4.வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவர் மற்றும் உறுப்பினர்கள்

| வார்டு எண் | உறுப்பினர் பெயர் | வார்டு எண் |
|---|---|---|
| 1 | திருமதி.எம்.சுதா தலைவர் | 29 |
| 2 | திரு. அ. அல்லா பிச்சை உறுப்பினர் | 19 |
| 3 | திரு. ச. உலகநாதன் உறுப்பினர் | 27 |
| 4 | திருமதி. மு. க. ஷர்மிளா உறுப்பினர் | 34 |
| 5 | திருமதி. மு .பாலம்மாள் உறுப்பினர் | 38 |
| 6 | திருமதி.பொன்மாணிக்கம் உறுப்பினர் | 42 |
| 7 | திரு.எம். எஸ். முகைதீன் அப்துல் காதர் உறுப்பினர் | 44 |
| 8 | திரு.ரசூல் மைதீன் உறுப்பினர் | 50 |
| 9 | திருமதி.சகாய ஜீலியட் மேரி உறுப்பினர் | 51 |

## 5.நகரமைப்புக்குழு தலைவர் மற்றும் உறுப்பினர்கள்

| வார்டு எண் | உறுப்பினர் பெயர் | வுார்டு எண் |
|---|---|---|
| 1 | திருமதி.ஜெ.சங்கீதா தலைவர் | 41 |
| 2 | திருமதி.எம். இந்திரா உறுப்பினர் | 7 |
| 3 | திரு. மு. சுப்பிரமணியன் உறுப்பினர் | 18 |
| 4 | திருமதி. இ. ராஜேஸ்வரி உறுப்பினர் | 21 |
| 5 | திரு. பா. மாரியப்பன் உறுப்பினர் | 22 |
| 6 | திருமதி. அ. அனார்கலி உறுப்பினர் | 23 |
| 7 | திருமதி.லெட்சுமி உமாபதிசிவன் உறுப்பினர் | 33 |
| 8 | திரு. செ .நித்திய பாலையா. உறுப்பினர் | 52 |
| 9 | திரு. இரா. முத்துசுப்பிரமணியன் உறுப்பினர் | 55 |

## 6.பணிகள் குழு தலைவர் மற்றும் உறுப்பினர்கள்

| வார்டு எண் | உறுப்பினர் பெயர் | வார்டு எண் |
|---|---|---|
| 1 | திரு.பி.வில்சன் மணி துரை தலைவர் | 40 |
| 2 | திருமதி. கே.மேரி உறுப்பினர் | 8 |
| 3 | திரு. ச. கந்தன் உறுப்பினர் | 11 |
| 4 | திரு. அ. ஷேக் மன்சூர் உறுப்பினர் | 20 |
| 5 | திருமதி. எஸ். அனுராதா உறுப்பினர் | 32 |
| 6 | திருமதி. சு.பேச்சியம்மாள் உறுப்பினர் | 35 |
| 7 | திருமதி.ஷபி அமீர் பாத்து உறுப்பினர் | 47 |
| 8 | திருமதி. ஆமீனா பீவி உறுப்பினர் | 48 |
| 9 | திரு.அலி ஷேக் மன்சூர் உறுப்பினர் | 49 |

நியமனக்குழு உறுப்பினர் : திருமதி.கோகுலவாணி —— வார்டு எண் : 12

27.07.2023 அன்று நடைபெற்ற திருநெல்வேலி மாநகராட்சி வரிவிதிப்பு மேல்முறையீட்டு குழு மறைமுக தேர்தலில் கீழ்க்காணும் பட்டியலில் கண்டுள்ள மாமன்ற உறுப்பினர்கள் வரிவிதிப்பு மேல்முறையீட்டு குழு உறுப்பினர்களாக தேர்தெடுக்கப்பட்டனர்

| வ.எண். | உறுப்பினர்களின் பெயர் | வார்டு எண். |
|---|---|---|
| 1 | திரு.உலகநாதன் | வார்டு எண் 27 |
| 2 | திரு.கந்தன் | வார்டு எண் 11 |
| 3 | திருமதி.பொன்மாணிக்கம் | வார்டு எண் 42 |
| 4 | திருமதி.சுப்புலெட்சுமி | வார்டு எண் 9 |
| 5 | திரு.ராஜு | வார்டு எண் 1 |
| 6 | திரு.ரவீந்தர் | வார்டு எண் 24 |
| 7 | திரு.முகைதீன் அப்துல்காதர் | வார்டு எண் 44 |
| 8 | திருமதி.கீதா | வார்டு எண் 14 |
| 9 | திரு.ஜெகநாதன் | வார்டு எண் 5 |

## நிர்வாகம்

திரு.தாக்கரே சுபம் ஞானதேவ்ராவ், இ.ஆ.ப. அவர்கள், 01.04.2024 முதல் 19.07.2024 முடிய ஆணையாளராக பணிபுரிந்துள்ளார்.

திரு.ஆ.தாணுமூர்த்தி, துணை ஆணையாளர் அவர்கள் 20.07.2024 முதல் 24.07.2024 முடிய ஆணையாளர் (கூடுதல் பொறுப்பு) ஆக பணிபுரிந்துள்ளார்.

திரு. என்.ஒ.சுகபுத்ரா, ஆணையாளர், இ.ஆ.ப. அவர்கள் 25.07.2024 முதல் 31.03.2025 முடிய ஆணையாளராக பணிபுரிந்துள்ளார்.

மைய அலுவலகத்தில் துணை ஆணையாளர், செயற் பொறியாளர், நகர திட்டமிடுநர், உதவி ஆணையாளர் (கணக்குகள்) மாநகர நல அலுவலர், உதவி ஆணையாளர் (நி), உதவி நகர திட்டமிடுநர் ஆகிய பணியிடங்களில் அறிக்கையாண்டில் கீழ்க்கண்ட அலுவலர்கள் பணிபுரிந்து வந்துள்ளார்கள்.

துணை ஆணையாளர் - திரு.ஆ.தாணுமூர்த்தி - 01.04.2024 முதல் 09.08.2024 முடிய
துணை ஆணையாளர் (வ)(பொ)-திரு.து.சந்திரமோகன் - 24.9.24 முதல் 19.12.24 முடிய
துணை ஆணையாளர் - திரு.ஒ.ராஜாராம் - 20.12.2024 முதல் 31.03.2025 முடிய

செயற்பொறியாளர் - திரு.வி.வாசுதேவன், 01.04.2024 முதல் 31.05.2024 முடிய
செயற் பொறியாளர் (பொ) - திரு. ஜி.தங்கப்பாண்டி, 01.06.2024 முதல் 23.9.24 முடிய
செயற் பொறியாளர் (பொ) - திரு.எம்.ரவி - 24.09.2024 முதல் 03.11.2024 முடிய
செயற் பொறியாளர் - திரு. C.கண்ணன்- 04.11.2024 முதல் 31.03.2025 முடிய

செயற்பொறியாளர்(திட்டம்)(பொ)திரு.வி.வாசுதேவன் 01.04.2024 முதல் 31.05.2024 முடிய
செயற் பொறியாளர் (திட்டம் (பொ) திரு. F.கெபின் ஜாய் - 1.6.2024 முதல் 14.8.2024 முடிய
செயற் பொறியாளர் (திட்டம்)திரு.எம்.கே.தமிழ்செல்வன் 15.08.2024 முதல் 31.03.2025 முடிய

மாநகர நல அலுவலர் ஆக டாக்டர் எம்.சரோஜா 01.04.2024 முதல் 16.07.2024 முடிய பணிபுரிந்துள்ளார்.

மாநகர நல அலுவலர் (பொ) - திருமதி.ராணி, மருத்துவ அலுவலர்- 17.07.2024 முதல் 31.03.2025 முடிய மாநகராட்சி மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள் சம்பந்தமான அனைத்து பணிகளையும் பார்த்து வந்துள்ளார்.

மாநகர நல அலுவலர் (பொ) - திரு.டி.அரசகுமார், சுகாதார அலுவலர் - 17.07.2024 முதல் 09.01.2025 முடிய பொது சுகாதாரப் பணிகள் மற்றும் சுகாதாரப் பிரிவு கோப்புகள் அனைத்தையும் பார்த்து வந்துள்ளார்.

உதவி ஆணையாளர் (நிர்வாகம்) (பொ) திரு.வீ.பாலசுப்ரமணியன் 01.04.2024 முதல் 22.05.2024 முடிய

உதவி ஆணையாளர் (நிர்வாகம்) (பொ) திரு.வ.தங்கப்பாண்டியன் 23.05.2024 முதல் 31.03.2025 முடிய

உதவி ஆணையாளர் (கணக்குகள்) திரு.வீ.பாலசுப்ரமணியன் 01.04.2024 முதல் 22.05.2024 முடிய

உதவி ஆணையாளர் (கணக்குகள்) (பொ) - திருமதி.சி.மகாலெட்சுமி 22.05.2024 முதல் 17.07.2024 முடிய

உதவி ஆணையாளர் (கணக்குகள்) திரு.வீ.பாலசுப்ரமணியன் 18.07.2024 முதல் 15.10.2024 முடிய

உதவி ஆணையாளர் (கணக்குகள்) (பொ) - திருமதி.சி.மகாலெட்சுமி 16.10.2024 முதல் 25.12.2024 முடிய

உதவி ஆணையாளர் (கணக்குகள்) (பொ) - திரு.து.சந்திரமோகன் - 26.12.2024 முதல் 31.03.2025 முடிய

உதவி ஆணையாளர் (வருவாய் (பொ) - திரு.என்.மணிகண்டன் - 01.04.2024 முதல் 23.09.2024 முடிய

உதவி ஆணையாளர் (வருவாய்) (பொ) - திருமதி.நே.சுகிபிரேமலா — 24.09.2024 முதல் 22.10.2024 முடிய

உதவி ஆணையாளர் (வருவாய்) (பொ) - திரு.வ.நாராயணன் - 23.10.2024 முதல் 31.03.2025 முடிய

உதவி நகர திட்டமிடுநர் - திரு. F.கெபின் ஜாய் - 01.04.2024 முதல் 31.03.2025 முடிய

நிர்வாக நலனுக்காக இம்மாநகராட்சி நான்கு மண்டல அலுவலகங்களாக செயல்பட்டு வருகின்றது. ஒவ்வொரு மண்டல அலுவலகமும் ஒரு உதவி ஆணையர் கீழ் இயங்கி வருகின்றது. அதன்படி அறிக்கையாண்டில் கீழ்க்கண்ட உதவி ஆணையர்கள் மண்டல அலுவலகங்களில் பணியாற்றி வந்துள்ளார்கள்.

**தச்சநல்லூர் மண்டலம்**

திருமதி. சௌந்தர்யா, துணை ஆட்சியர் 01.04.2024 முதல் 08.07.2024 முடிய உதவி ஆணையாளர் ஆக பணிபுரிந்துள்ளார்.

திரு.த.ஜாண்சன் தேவசகாயம், துணை ஆட்சியர் - 08.07.2024 முதல் 31.03.2025 முடிய உதவி ஆணையாளர் ஆக பணிபுரிந்துள்ளார்.

**உதவி செயற் பொறியாளர்**

திருமதி.எஸ்.பேரின்பம் 01.04.2024 முதல் 31.03.2025 முடிய உதவி செயற் பொறியாளராக பணிபுரிந்துள்ளார்.

**பாளையங்கோட்டை மண்டலம்**

திருமதி. சுகி பிரேமலா, துணை ஆட்சியர் 01.04.2024 முதல் 14.02.2025 முடிய உதவி ஆணையாளராக பணிபுரிந்துள்ளார்.

திரு.வ.நாராயணன் உதவி ஆணையாளர் 14.02.2025 முதல் 05.03.2025 முடிய உதவி ஆணையாளராக பண்ிபுரிந்துள்ளார்

திரு.கு.புரந்தரதாஸ், துணை ஆட்சியர் 05.03.2025 முதல் 31.03.2025 முடிய உதவி ஆணையாளராக பணிபுரிந்துள்ளார்.

**உதவி செயற் பொறியாளர்**

திருமதி.எஸ்.பேரின்பம், 01.04.2024 முதல் 19.08.2024 முடிய உதவி செயற் பொறியாளராக பணிபுரிந்துள்ளார்.

திரு.ஜி.தங்கப்பாண்டி 20.08.2024 முதல் 31.03.2025 முடிய உதவி செயற் பொறியாளராக பணிபுரிந்துள்ளார்.

**மேலப்பாளையம் மண்டலம்**

திரு.து.சந்திரமோகன் 01.04.2024 முதல் 31.03.2025 முடிய உதவி ஆணையாளராக பணிபுரிந்துள்ளார்.

**உதவி செயற் பொறியாளர்**

திரு.எம்.ரவி, 01.04.2024 முதல் 07.01.2025 முடிய உதவி செயற் பொறியாளர் ஆக பணிபுரிந்துள்ளார்

திரு. மணிகண்டன் ஆவுடையப்பன் 08.01.2025 முதல் 31.03.2025 முடிய உதவி செயற் பொறியாளர் ஆக பணிபுரிந்துள்ளார்.

**திருநெல்வேலி மண்டலம்**

திரு.ஜி.தங்கப்பாண்டி உதவி செயற் பொறியாளர் 01.04.2024 முதல் 19.08.2024 முடிய உதவி ஆணையர் (பொ) ஆக பணிபுரிந்துள்ளார்.

திரு. த.ஜாண்சன் தேவசகாயம், துணை ஆட்சியர் 20.08.2024 முதல் 22.10.2024 முடிய உதவி ஆணையர் (பொ) ஆக பணிபுரிந்துள்ளார்

திரு. வ. நாராயணன், 23.10.2024 முதல் 13.02.2025 முடிய உதவி ஆணையாளர் ஆக பணிபுரிந்துளார்

திரு. த.ஜாண்சன் தேவசகாயம், துணை ஆட்சியர் 14.02.2025 முதல் 04.03.2025 முடிய உதவி ஆணையாளர் (பொ) ஆக பணிபுரிந்துள்ளார்

திரு. வ. நாராயணன், 05.03.2025 முதல் 31.03.2025 முடிய உதவி ஆணையாளர் ஆக பணிபுரிந்துளார்

**உதவி செயற் பொறியாளர்**

திரு.ஜி.தங்கப்பாண்டி, 01.04.2024 முதல் 19.08.2024 முடிய உதவி செயற் பொறியாளராக பணிபுரிந்துள்ளார்.

திரு.எஸ்.லெனின், உதவி பொறியாளர் 20.08.2024 முதல் 08.11.2024 முடிய உதவி செயற் பொறியாளர் (பொ) ஆக பணிபுரிந்துள்ளார்.

திரு. அலெக்சாண்டர் 09.11.2024 முதல் 31.03.2025 முடிய உதவி செயற் பொறியாளராக பணிபுரிந்துள்ளார்.

உதவி ஆணையர்(நி)
திருநெல்வேலி மாநகராட்சி

## திருநெல்வேலி மாநகராட்சி

## நிர்வாக அறிக்கை (Administrative Report) 2024 – 2025

### நகரமைப்புப் பிரிவு

திருநெல்வேலி மாநகராட்சியின் நகரமைப்பு சம்பந்தப்பட்ட பணிகளை திட்டப்பிரிவு கவனித்து வருகின்றது. மாநகராட்சியின் நகரமைப்பு பணிகளை மாநகர திட்டமிடுநர், உதவி மாநகர திட்டமிடுநர், உதவிப்பொறியாளர்(திட்டம்) ஒரு உதவியாளர் மற்றும் நான்கு மண்டல அலுவலகத்திலும் நகரமைப்பு பணிகள் கவனிக்கப்பட்டு வருகின்றது.

கட்டிட அனுமதி, மனைப்பிரிவு, மனை உட்பிரிவு, இயந்திர நிறுவன அனுமதி கோரும் விண்ணப்பங்கள், முழுமைத் திட்ட நில பயன் மாற்றம் செய்ய அனுமதி கோரும் மனுக்கள், திட்ட அனுமதி கோரும் மனுக்கள், நகரமைப்புத் திட்ட நில பயன் மாற்றம் செய்ய அனுமதி கோரும் மனுக்கள், அனுமதியற்ற மனைப்பிரிவு மற்றும் மனைகளை வரன்முறைப்படுத்துதல் மற்றும் மாநகராட்சியின் வருமானம் தரக்கூடிய வளர்ச்சித் திட்டங்கள் தயார் செய்து சம்பந்தப்பட்ட துறைகளிடம் ஒப்புதல் பெறுதல் ஆகியன இப்பிரிவில் முக்கிய பணிகளாகும்.

55 வார்டுகளைக் கொண்ட திருநெல்வேலி மாநகராட்சியின் மொத்த விஸ்தீரணம் 108.65 சதுர கிலோ மீட்டராகும். இதன் மக்கள் தொகை 2011ம் வருட மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி 4,74,838 ஆகும். திருநெல்வேலி மாநகராட்சியில் முந்தைய திருநெல்வேலி, பாளையங்கோட்டை, மேலப்பாளையம் ஆகிய மூன்று நகராட்சிகளும், தச்சநல்லூர் நகர பஞ்சாயத்தும் முழுமையான 11 கிராம பஞ்சாயத்துக்களும், 3 பகுதி கிராம பஞ்சாயத்துக்களும் ஆக மொத்தம் 37 வருவாய் கிராமங்களுடன் உள்ளடக்கியுள்ளது. அரசு அறிவுரைகளின்படி நிர்வாக வசதிக்காக திருநெல்வேலி மாநகராட்சியை, திருநெல்வேலி, பாளையங்கோட்டை மேலப்பாளையம், தச்சநல்லூர் என நான்கு மண்டல அலுவலகங்களாக பிரிக்கப்பட்டு அவைகள் உதவி ஆணையர்களின் கீழ் செயல்பட்டு வருகின்றன. மேற்படி மண்டல பகுதிகளில் நகரமைப்பு பணிகளை மண்டல அலுவலகங்களில் பணிபுரியும் உதவி/ இளநிலைப் பொறியாளர்கள் மூலம் பரிந்துரை செய்யப்பட்டு, மைய அலுவலக திட்டப்பிரிவு மூலம் நகரமைப்பு பணிகள் அனைத்தும் ஆணையாளர் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

திருநெல்வேலி மாநகராட்சியின் முறையான வளர்ச்சிக்காக மறு இணக்கம் அளிக்கப்பட்டுள்ள முழுமைத் திட்டம் மற்றும் 62 விரிவு அபிவிருத்தி திட்டங்கள் ஆகியவை திருநெல்வேலி உள்ளூர் திட்டக்குழுமத்தால் தயார் செய்யப்பட்டு நகரின் வளர்ச்சியை மேற்படி திட்டங்களின்படி முறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

முழுமைத் திட்டம் ( Master Plan )

திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதி முழுமைக்கும் தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971ன்படி முழுமைத் திட்டம் தயார் செய்யப்பட்டு அத்திட்டத்திற்கு அரசிடமிருந்து அரசாணை எண். 505 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள்.20.7.94-ல் இசைவு பெறப்பட்டு, இசைவு பெறப்பட்ட நாள் முதல் அத்திட்டம் அமுல் செய்யப்பட்டு வருகின்றது. அதன்பிறகு தேவையான ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் பெறப்பட்டு, மேற்படி திட்டத்திற்கு திருநெல்வேலி உள்ளூர் திட்டக்குழுமத்தால் இறுதி வடிவம் கொடுக்கப்பட்டு அரசின் இறுதி ஒப்புதலுக்காக அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி முழுமைத்திட்டத்தில் மாநகராட்சி எல்கைக்குள் உள்ள அனைத்து நிலங்களின் தற்போதைய மற்றும் பிற்கால உத்தேச நிலப் பயன்பாடு குறிப்பிடப்பட்டுள்ளது. முதன்மைக்குடியிருப்பு, கலப்பு குடியிருப்பு, வணிகப் பயன்பாடு, தொழிற்சாலைப் பயன்பாடு, கட்டுப்படுத்தப்பட்ட தொழிற்சாலை, பொதுப் பயன்பாடு, போக்குவரத்து பயன்பாடு, விவசாயப் பயன்பாடு என நிலங்களை வகைப்பாடு செய்து உள்ளூர் திட்டக்குழுமமும், மாநகராட்சியும் மேற்படி திட்டத்தை அமுல்படுத்தி வருகின்றது.

**நகரமைப்பு திட்டங்கள்**

காற்றோட்டமாக, சுகாதாரமான வாழ்விற்கு வழிவகுக்கும் வகையில் நகரை திட்டமிட்ட வழியில் அபிவிருத்தியடையச் செய்யும் நோக்கோடு இந்நகரில் கீழ்க்கண்ட விவரப்படி 62 நகரமைப்புத் திட்டங்கள் திருநெல்வேலி உள்ளூர் திட்டக்குழுமத்தால் தயார் செய்யப்பட்டுள்ளன. இவைகளில் 35 விரிவு அபிவிருத்தி திட்டங்களுக்கு ஒப்புதல் பெறப்பட்டும், இதர அபிவிருத்தி திட்டங்களுக்கு இசைவு அளிக்கப்பட்டும், வரைவு நிலையிலும் உள்ளது.

நகரமைப்புத் திட்டங்களின் நிலை குறித்த விபரம் :
உஎ

| வ.எண். | திட்டத்தின் பெயர் | ஒப்புதல் பெற்ற விபரம் |
|---|---|---|
| 1. | பேட்டை நகரமைப்புத் திட்டம் பாகம் 1 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 2. | பேட்டை நகரமைப்புத் திட்டம் பாகம் 2 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 3. | சுத்தமல்லி நகரமைப்புத் திட்டம் பாகம் 1 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 4. | சுத்தமல்லி நகரமைப்புத் திட்டம் பாகம் 2 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 5. | சுத்தமல்லி நகரமைப்புத் திட்டம் பாகம் 3 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 6. | பழைய பேட்டை நகரமைப்புத் திட்டம் | ஒப்புதல் பெறப்பட்டது |
| 7. | நரசிங்கநல்லூர் நகரமைப்புத் திட்டம் | ஒப்புதல் பெறப்பட்டது |
| 8. | திருநெல்வேலி டவுண் ரெயில்வேபீடர் ரோடு நகரமைப்புத் திட்டம் | ஒப்புதல் பெறப்பட்டது |
| 9. | குட்டக்கரை நகரமைப்புத் திட்டம் | ஒப்புதல் பெறப்பட்டது |
| 10. | சுவாமி நெல்லையப்பர் நெடுஞ்சாலை விரிவு அபிவிருத்தித் திட்டம் | ஒப்புதல் பெறப்பட்டது |
| 11. | பெருமாள்புரம் விரிவாக்கம் நகரமைப்பு திட்டம் எண்.1 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 12. | பெருமாள்புரம் விரிவாக்கம் நகரமைப்பு திட்டம் எண்.2 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 13. | பெருமாள்புரம் விரிவாக்கம் நகரமைப்பு திட்டம் எண்.3 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 14. | பெருமாள்புரம் விரிவாக்கம் நகரமைப்பு திட்டம் எண்.4 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 15. | பெருமாள்புரம விரிவாக்கம் நகரமைப்பு திட்டம் எண்.5 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 16. | பெருமாள்புரம் விரிவாக்கம் நகரமைப்பு திட்டம் எண்.6 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 17. | பெருமாள்புரம் விரிவாக்கம் நகரமைப்பு திட்டம் எண்.7 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 18. | பெருமாள்புரம் விரிவாக்கம் நகரமைப்பு திட்டம் எண்.8 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 19. | பெருமாள்புரம் விரிவாக்கம் நகரமைப்பு திட்டம் எண்.9 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 20. | பெருமாள்புரம் விரிவாக்கம் நகரமைப்பு திட்டம் எண்.10 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 21. | பெருமாள்புரம் விரிவாக்கம் நகரமைப்பு திட்டம் எண்.11 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 22. | ஹைகிரவுண்ட் ஏரியா நகரமைப்புத் திட்டம் எண்.1 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 23. | இலந்தகுளம் ஏரியா நகரமைப்புத் திட்டம் | ஒப்புதல் பெறப்பட்டது |
| 24. | வண்ணார்பேட்டை பாளையங்கோட்டை நெடுஞ்சாலை நகரமைப்புத் திட்டம் எண்.1 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 25. | வண்ணார்பேட்டை பாளையங்கோட்டை நெடுஞ்சாலை நகரமைப்புத் திட்டம் எண்.2 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 26. | மேலப்பாளையம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.1 | ஒப்புதல் பெறப்பட்டது |
| 27. | மேலப்பாளையம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.2 | ஒப்புதல் பெறப்பட்டது |

28. மேலப்பாளையம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.3 ஒப்புதல் பெறப்பட்டது
29. மேலப்பாளையம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.4 இசைவு அளிக்கப்பட்டது
30. மேலப்பாளையம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.5 இசைவு அளிக்கப்பட்டது
31. மேலப்பாளையம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.6 இசைவு அளிக்கப்பட்டது
32. தச்சநல்லூர் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.1 ஒப்புதல் பெறப்பட்டது
33. தச்சநல்லூர் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.2 ஒப்புதல் பெறப்பட்டது
34. தச்சநல்லூர் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.3 ஒப்புதல் பெறப்பட்டது
35. தச்சநல்லூர் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.4 ஒப்புதல் பெறப்பட்டது
36. தச்சநல்லூர் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.5 ஒப்புதல் பெறப்பட்டது
37. தச்சநல்லூர் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.6 ஒப்புதல் பெறப்பட்டது
38. வண்ணார்பேட்டை பெருவழி விரிவு அபிவிருத்தி ஒப்புதல் பெறப்பட்டது திட்டம் எண்.1
39. வண்ணார்பேட்டை பெருவழி விரிவு அபிவிருத்தி இசைவு நிலை திட்டம் எண்.2
40. சிந்துபூந்துறை விரிவு அபிவிருத்தி திட்டம் ஒப்புதல் பெறப்பட்டது
41. உடையார்பட்டி விரிவு அபிவிருத்தி திட்டம் ஒப்புதல் பெறப்பட்டது
42. ரஹ்மத்நகர் விரிவு அபிவிருத்தி திட்டம் ஒப்புதல் பெறப்பட்டது
43. இராஜகோபாலபுரம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.1 இசைவு நிலை
44. இராஜகோபாலபுரம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.2 இசைவு நிலை
45. இராஜகோபாலபுரம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.3 இசைவு நிலை
46. சிவனடியார்குளம் விரிவு அபிவிருத்தி திட்டம் இசைவு நிலை
47. நடுக்காமுடையார்குளம் விரிவு அபிவிருத்தி திட்டம் வரைவு நிலை
48. வி.மு.சத்திரம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.1 ஒப்புதல் பெறப்பட்டது
49. வி.மு.சத்திரம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.2 ஒப்புதல் பெறப்பட்டது
50. வி.மு.சத்திரம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.3 ஒப்புதல் பெறப்பட்டது
51. வி.மு.சத்திரம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.4 ஒப்புதல் பெறப்பட்டது
52. வி.மு.சத்திரம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.5 ஒப்புதல் பெறப்பட்டது
53. வி.மு.சத்திரம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.6 ஒப்புதல் பெறப்பட்டது
54. வி.மு.சத்திரம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.7 ஒப்புதல் பெறப்பட்டது

55. வி.மு.சத்திரம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.8 ஒப்புதல் பெறப்பட்டது
56. வி.மு.சத்திரம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.9 ஒப்புதல் பெறப்பட்டது
57. வி.மு.சத்திரம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.10 வரைவு நிலை
58. வி.மு.சத்திரம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.11 வரைவு நிலை
59. வி.மு.சத்திரம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.12 வரைவு நிலை
60. வி.மு.சத்திரம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.13 வரைவு நிலை
61. வி.மு.சத்திரம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.14 வரைவு நிலை
62. வி.மு.சத்திரம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.15 வரைவு நிலை

மேற்படி திட்டங்களில் தற்சமயம் குடியிருப்பு, வணிகப் பயன்பாடு, தொழிற்சாலைப் பயன்பாடு, பொது ஒதுக்கீடு, கல்விப் பயன்பாடு, போக்குவரத்து, விவசாயப்பகுதி மற்றும் திறவிடங்களில் உள்ள நிலங்களை கணக்கிட்டு மீதமுள்ள காலியாக உள்ள நிலங்களில் நகரமைப்புத் திட்ட நெறிமுறைகளின்படி மேற்கண்ட அனைத்து நிலப் பயன்பாடுகளுக்கும் பிற்கால மக்களின் தேவையைக் கருதி அதற்கேற்றவாறு திட்டத்தில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு நிலமும் திட்டத்தில் குறிப்பிட்டபடி அவ்வகை நிலப் பயன்பாடாகத்தான் அபிவிருத்தியடைதல் வேண்டும். உள்ளூர் திட்டக்குழுமம் தயார் செய்யும் இத்திட்டங்களை திருநெல்வேலி மாநகராட்சி அமுல்படுத்தி வருகிறது.

**கட்டிட உரிமையாணை வழங்குதல்**

மாநகராட்சி பகுதியில் 1500 ச.அடிக்குள் அமையும் குடியிருப்புகளுக்கு அந்தந்த வார்டு அலுவலகங்களிலேயே அனுமதி வழங்கவும், அதற்கு மேற்பட்ட 10,000 சதுர அடி பரப்பளவு குடியிருப்புகள், மற்றும் 2000 சதுர அடிக்குள் அமையும் ஏனைய சில்லரைக் கடை உபயோகங்களுக்கு அந்தந்த வார்டு அலுவலகங்களின் இணையம் தளம் வாயிலாக விண்ணப்பங்கள் பெறப்பெற்று வார்டு உதவி ஆணையாளர்களின் அறிக்கையுடன் உதவி மாநகர திட்டமிடுநர், மாநகர திட்டமிடுநர் மற்றும் ஆணையர் ஆகியோரின் ஒப்புதல் பெற்று மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

**அனுமதியற்ற/அனுமதிக்கு மாறான கட்டிடங்கள் மீது நடவடிக்கை விபரம்:**

திருநெல்வேலி மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் அனுமதிக்கு மாறாகவும், அனுமதியின்றியும் கட்டப்படும் கட்டிடங்களுக்கு நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 56,57 இன் கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டு பூட்டி முத்திரையிடப்படுகிறது. இந்த ஆண்டில்

மொத்தம் 127 கட்டிடங்களுக்கு அறிவிப்பு வழங்கப்பட்டு அதில் 9 கட்டிடங்கள் பூட்டி முத்திரையிடப்பட்டுள்ளது.

### முறைப்படுத்துதல் திட்டம்

### மனைப்பிரிவு

அரசு வழிகாட்டுதலின்படி திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதியில் 356 அனுமதியற்ற மனைப்பிரிவுகள் திருநெல்வேலி உள்ளூர் திட்டக்குழுமத்திலிருந்து ஒப்புதல் பெறப்பட்டு, அவற்றின் ஒவ்வொரு உரிமையாளரையும் அணுகி அரசு ஆணையை விளக்கி விண்ணப்பிக்க தெரிவித்து அதில் அனைத்து மனைப்பிரிவுகளில் உள்ள மனைகளுக்கு உரிய கட்டணம் செலுத்தி விண்ணப்பித்தவர்களுக்கு மேற்படி அனுமதியற்ற மனைப்பிரிவு முறைப்படுத்தி ஆணையிடப்பட்டுள்ளது.

### அனுமதியற்ற மனைப்பிரிவு/தனிமனைகள் வரன்முறைப்படுத்துதல்:

தற்போது வெளியிடப்பட்டுள்ள G.O.(MS).No.78, Housing and Urban Development department dated 04.5.2017 & G.O.(Ms) No.172, Housing and Urban Development (UD4(3)) department, dated 13.10.2017-ன்படி திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதிக்குள் அனுமதியற்ற மனைப்பிரிவு மற்றும் தனிமனைகளுக்கு வரன்முறைப்படுத்த ரூ.500/--னை கூராய்வுக்கட்டணம் செலுத்தி, திருநெல்வேலி உள்ளூர் திட்டக்குழுத்தில் விண்ணப்பிக்கப்படுகிறது. திருநெல்வேலி உள்ளூர் திட்டக்குழுமத்தால் வரன்முறைப்படுத்தப்படுகிறது. வரன்முறைப்படுத்தப்பட்ட மனைகளுக்கு, மனையின் பரப்பளவிற்கு ச.மீட்டருக்கு ரூ175/-வீதம் வரன்முறைக்கட்டணம் அரசு கணக்கிலும் மற்றும் வளர்ச்சிக்கட்டணம் ரூ500/-வீதம் மாநகராட்சி கருவூலகத்திலும் செலுத்தி அனுமதியற்ற மனைகள் மொத்தம் 3033 கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளது.

| Year | Total Plots | Development Charges |
|---|---:|---:|
| 2018-2019 | 1149 | 116441126 |
| 2019-2020 | 469 | 43316441 |
| 2020-2021 | 354 | 34565486 |
| 2021-2022 | 247 | 23676611 |
| 2022-2023 | 287 | 26956285 |

| | | |
|---|---|---|
| 2023-2024 | 273 | 25339685 |
| 2024-2025 | 254 | 29427021 |
| Total | 3033 | 299722655 |

மனைகள் வரன்முறைப்படுத்தப்பட்டு மாநகராட்சிக்கு மேம்பாட்டுக் கட்டணம் ரூ.29.972 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது.

மழைநீர் சேகரிப்பு

அரசு கடந்த 2002-ம் ஆண்டு அனைத்துக் கட்டிடங்களிலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும் என அறிவித்ததைத் தொடர்ந்து இம்மாநகராட்சியில் திட்டப்பிரிவு அதனைத் தலையாய கடமையாகக் கொண்டு மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து கட்டிடங்களிலும், அரசு கடடிடங்களிலும் மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டது. புதிதாக கட்டப்படும் கட்டிடங்களுக்கு மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்பு இருந்தாலொழிய எந்த கட்டிடத்திற்கும் அனுமதி வழங்கப்படுவதில்லை.

**சூரிய ஒளி வெப்பம் மூலம் தண்ணீர் சூடாக்கும் கருவி**

மின் சிக்கனத்தை கடைப்பிடிக்கும் வகையில் அரசு அறிவித்தபடி சூரிய ஒளி வெப்பம் மூலம் தண்ணீர் சூடாக்கும் கருவி அமைக்க வேண்டும் என பெரிய குடியிருப்புக் கட்டிடங்கள், தங்கும் விடுதிகள், உணவு விடுதிகள், வளாகங்கள், மருத்துவமனைகள் ஆகியவைகளுக்கு நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்பட்டு தற்போது கட்டி முடித்த ஒரு சில கட்டிங்களில் அமைக்கப்பட்டுள்ளது. அதனை திட்டப்பிரிவு மூலம் தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**பொது உபயோகக் கட்டிடங்கள்**

அனைத்துப் பள்ளி கட்டிடங்கள் மற்றும் பிற பொது உபயோகக் கட்டிடங்களான திருமண மண்டபங்கள், கல்வி கட்டிடங்கள், மருத்துவமனைகள், தொழிற்கூடங்கள், வணிக வளாகம், திட்ட விதிகள், வளர்ச்சி கட்டுப்பாட்டு விதிகள் அனைத்து விதிகளையும் திருப்தி செய்யும் வகையில் கட்டப்பட்டுள்ளதா? என இத்திட்டப்பிரிவு மூலம் ஆய்வு செய்யப்பட்டு கண்காணிக்கப்படுகின்றது.

**இணைப்புச்சாலை :**

திருநெல்வேலி டவுண் பார்வதி திரையரங்கத்திலிருந்து அருணகிரி திரையரங்கம் அருகேயுள்ள குறுக்குத்துறை சாலையுடன் இணைக்கும் மேற்படி திட்டச்சாலைக்கான சர்வே எண் 1456/1மற்றும் கையகப்படுத்தப்பட்ட 20 பேர்களின் நிலத்திற்கான இழப்பீடுத்தொகையினை G.O.(MS)No.105 Municipal Administration and Water Supply (MC2) Department நாள் 25.9.2020-ன்படி மாநகராட்சி பொது நிதியிலிருந்தும் மற்றும் அனுமதியற்ற மனைகள் வரன்முறைப்படுத்தும் திட்டத்தின் கீழ் வரன்முறைப்படுத்தப்பட்டுள்ள மனைகளுக்கான மேம்பாட்டுக் கட்டணத் தொகை ரூ.18.36 கோடி வழங்கப்பட்டு நில உரிமையாளருக்கு இழப்பீட்டு தொகை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் மூலமாக வழங்கப்பட்டு மாநகராட்சி மூலம் தார் சாலை அமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

17/06/25

மாநகர திட்டமிடுநர் (பொ)
திருநெல்வேலி மாநகராட்சி

17.6.25

# பொது சுகாதாரம்

# 2024-2025

தமிழக அரசின் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துகள் துறை இயக்குநர், சென்னை அலுவலகம் மூலம் மாநகரநல அலுவலர் அயற்பணி அடிப்படையில் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றார். இப்பிரிவில் 4 சுகாதார அலுவலர்கள், 7 சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் 07 துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு சம்பந்தமான பணிகளுக்கு நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றார்கள்.

01.04.2024 முதல் 19.07.2024 முடிய திரு.தாக்கரே சுபம் ஞானதேவ்ராவ்,இ.ஆ.ப ஆணையாளராகவும், 20.07.2024 முதல் 24.07.2024 வரை திரு.தாணுமூர்த்தி ஆணையாளராகவும்(பொ) மற்றும் 25.07.2024 முதல் நாளது தேதிவரை மரு.என்.ஓ.சுகபுத்ரா இ.ஆ.ப., ஆணையாளராகவும் பதவி வகித்து வருகிறார். 01.04.2024 முதல் 16.07.2024 வரை மரு.M.சரோஜா மாநகர நல அலுவலராகவும், 19.07.2024 முதல் நாளது தேதிவரை மரு.ராணி மாநகர நல அலுவலராகவும்(பொ), பதவி வகித்து வருகிறார்.

நிர்வாக வசதிக்காக இம்மாநகராட்சியினை பொது சுகாதாரத்திற்காக 10 அலகுகளாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு அலகிற்கும் ஒரு சுகாதார ஆய்வாளரின் மேற்பார்வையின் கீழ் பொது சுகாதாரப் பணி நடைபெற்று வருகின்றது.

**திடக்கழிவு மேலாண்மை:**

மாநகராட்சி திடக்கழிவு (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள் 2016-ஐ பின்பற்றி மாநகரப் பகுதியில் சேரும் குப்பைகளை முழுமையாக அகற்ற பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மூன்று சக்கர மிதி வண்டிகள் மற்றும் BOV வாகனங்கள் மூலம் வீடுவீடாகச் சென்று குப்பைகளை பிரித்து வாங்கி அவைகளை ஓர் இடத்தில் சேகரித்து, பின்னர் அங்கிருந்து லாரிகள் மூலம் இராமையன்பட்டி உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லப்படுகின்றது.

சேகரிக்கப்பட்டுள்ள குப்பைகளை ஓர் இடத்தில் கொட்டுவதற்கு மாநகரப் பகுதியில் 583 குப்பைத் தொட்டிகள் வைக்கப்பட்டுள்ளன.

தற்பொழுது திடக்கழிவு மேலாண்மைப் பணியில் கீழ்க்கண்ட வாகன வசதிகளைக் கொண்டு குப்பைகள் அப்புறப்படுத்தப்படுகின்றன.

| | |
|---|---|
| 1. டிராக்டர் | 0 |
| 2. டிப்பர் லாரிகள் | 5 |
| 3. டம்பர் பிளேசர் லாரி | 3 |
| 4. காம்பாக்டர் லாரி | 6 |
| 5. LCV | 74 |

| | |
|---|---|
| 6. Mini JCB | 7 |
| 7. Road sweeper | 1 |
| 8.Hook Loader | 2 |
| 9.BOV | 119 |
| 10.Mini Hitachi | 2 |

ஜூன் 2023 முதல் ராம் & கோ நிறுவனத்தின் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மெட்ரிக் டன் ஒன்றிற்கு ரூ.3,438/- என்ற விகிதத்தில் ஒப்பந்தம் மூலம் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதியில் நாள்தோறும் 222 மெ.டன் குப்பை உருவாகின்றது. வீடுவீடாகச் சென்று குப்பைகளை சேகரிக்கப்படுகிறது. மட்கும் குப்பைகள் நுண்உரமாக்கும் மையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு உரமாக்கப்படுகிறது. மீதமுள்ள குப்பைகள் உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லப்படுகின்றது. 47 இடங்களில் நுண்உரமாக்கும் மையங்கள் ஏற்படுத்தப்பட்டு வீடுகளிலிருந்து வரும் மட்கும் குப்பை உரமாக்கப்பட்டு வருகிறது. மேற்படி உரம் விவசாயிகளுக்கும், பொது மக்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

மாநகரின் முக்கிய சந்திப்பு, பிரதான இடங்களில் வைக்கப்பட்டுள்ள பெரிய இரும்பு குப்பை தொட்டிகள் நிரம்பிய உடன் அப்புறப்படுத்தும் வகையில் கால அட்டவணை தயார் செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

திடக்கழிவு மேலாண்மை பணியில் ஈடுபட்டுள்ள துப்புரவுப் பணியாளர்களுக்கு சீருடை, காலணிகள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

குப்பைகளை வீடுவீடாகச் சென்று பிரித்து வாங்கும் பணியில் ஒப்பந்த அடிப்படையில் ராம் & கோ எனும் தனியார் நிறுவனம் 890 தூய்மைப் பணியாளர்களை ஈடுபடுத்தி அப்பணி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இது தவிர துப்புரவுப் பணியினை மேலும் சிறப்புற மேற்கொள்ளும் பொருட்டு நிரந்தர தூய்மைப் பணியாளர்கள் 254 நபர்கள், சுய உதவிக் குழுக்களை சேர்ந்த 523 தூய்மைப் பணியாளர்கள் மாநகரப் பகுதியில் உள்ள அனைத்து வார்டுகளிலும், வார்டு வரிசை கிரமமாக கூட்டுத் துப்புரவுப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இப்பணி பிரதி வாரம் ஒரு வார்டில் அந்தந்த மண்டலத்திலுள்ள அனைத்து துப்புரவுப் பணியாளர்களைக் கொண்டே மேற்கொள்ளப்படுகின்றது. இப்பணியின் போது கழிவுநீர் ஓடை சுத்தம் செய்தல், நீண்ட நாட்களாக தீர்க்கப்படாமல் உள்ள சுகாதாரம் சம்பந்தமான பிரச்னைகளுக்கு தீர்வு காணுதல் முதலானவை மேற்கொள்ளப்படுகின்றது. இதன் மூலம் வார்டு பகுதியின் சுகாதாரம் மேம்படுகின்றது.

**தூய்மை இந்தியா திட்டம்**

தூய்மை இந்தியா இயக்க திட்டத்தின் மூலம் 27 பரப்புரையாளர்கள், 4 மேற்பார்வையாளர்கள் மற்றும் ஒரு ஒருங்கிணைப்பாளர் ஆகியோர் வெளிக்கொணர்வு அடிப்படையில் தனியார் நிறுவனம் மூலம் நியமிக்கப்பட்டு, பொது மக்களுக்கு மாநகராட்சி சேவைகள், நோய் தடுப்பு, திடக்கழிவு மேலாண்மை ஆகியவை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் நகரங்களில் தூய்மைக்கான மக்கள் இயக்கம் சார்பில் "என்குப்பை - என் பொறுப்பு" என்ற சிறப்பு பணியின் மூலம் பிரதி மாதம் இரண்டாம் மற்றும் நான்காம் சனிக்கிழமைகளிலவ் கூடுதலாக சுகாதாரப் பணி மேற்கொள்ளப்படுகிறது. மாதத்தில் மூன்றாவது புதன்கிழமை பள்ளிகள், கல்லூரிகளில் திடக்கழிவு மேலாண்மை பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டுவருகிறது.

தமிழக அரசால் தடை செய்யப்பட்ட நெகிழி பைகளை பயன்படுத்தக்கூடாது என்றும் மீண்டும் மஞ்சப்பையை பயன்படுத்த வேண்டும் என்றும் பிளாஸ்டிக் கழிவுகள் சேகரிப்பு திட்டம், பள்ளிகள், கல்லூரிகள், திருமண மண்டபங்கள், மருத்துவமனைகள் உணவு விடுதிகள், பயிற்சி நிறுவனங்கள், நீர் நிலைகள் சாலையோரங்கள் வீடுகள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகள் ஆகியவற்றில் உற்பத்தியாகும் பிளாஸ்டிக் கழிவுகளை தினமும் சேகரித்து வைத்து மாநகராட்சி துப்புரவு பணியாளர்களிடம் ஒப்படைக்க தெரிவிக்கப்பட்டு மாதத்தில் மூன்றாவது வாரம் முழுவதும் நெகிழிப்பை சேகரிப்பு நடைபெற்று வருகிறது. இது தொடர்பாக விழிப்புணர்வு மற்றும் நெகிழி கழிவு சேகரிப்பு நிகழ்ச்சியினை நடத்துவதற்கு ரூ.2,52,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி விழிப்புணர்வு மற்றும் நெகிழி கழிவு சேகரிப்பு நிகழ்ச்சிகள் நடத்தி அதன் விபரத்தினை மீண்டும் மஞ்சப்பை செயலியில் பதிவேற்றம் செய்யப்படுகிறது.

தூய்மை பணியாளர்கள் மேம்பாட்டு திட்டத்தின் மூலம் மாநகராட்சி பகுதிகளில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களின் விபரங்கள் சேகரிக்கப்பட்டு SWDS போர்டலில் பதிவேற்றம் செய்யப்பட்டது.

மத்திய நகர்ப்புற அமைச்சகத்தால் வழங்கப்படும் தூய்மை இந்தியா திட்டம் ( Open Defecation Free) ODF + தரச்சான்றிதழ் 11.03.2024 அன்று வழங்கப்பட்டது.

**அச்சம் மற்றும் அருவருக்கத் தக்க உரிமங்கள்:**

திருநெல்வேலி மாநகராட்சி சட்டம் 1994 உபவிதிகள் செம்மையாக்கப்பட்டு தேவையான இடங்களில் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. அபாயகரமானதும் அருவருக்கத்தக்கதுமான உரிமையானை கட்டணம் மூலம் நடப்பு ஆண்டில் ரூ.28,23,893/- வருமானம் மாநகராட்சிக்கு வந்துள்ளது.

**நகர்நலத் திட்டம் மற்றும் தாய்சேய் நலத்திட்ட பணியாளர்கள் எண்ணிக்கை:**

| | |
|---|---|
| பெண் மருத்துவ அலுவலர்கள் | 10 |
| ஆண் மருத்துவ அலுவலர்கள் | 1 |
| பொது மருத்துவர் | 0 (Included in the above 10) |
| சித்த மருத்துவர்கள் | 1 |
| பகுதி சுகாதார செவிலியர்கள் | 6 |
| செவிலியர்கள் | 12 |
| நகரசுகாதார செவிலியர்கள் | 13 மற்றும் ANM (NUHM) |
| மருந்தாளுநர்கள் | 1 |
| நான்காம் நிலை ஊழியர்கள் | 26 |

இப்பணியாளர்களுக்கு ஆண்டு தோறும் சம்பளம் ரூ.7,50,15,582/- செலவழிக்கப்படுகின்றது. இவைகளில் நகர்நல மையங்களில் 2 பணியிடங்களுக்கான ஊதியம், குடும்ப நலத்துறை இயக்குநர், சென்னை அவர்களால் 2:1 மானியமாக வழங்கப்படுகின்றது.

**தாய் சேய் நலத் திட்டத்தின் சாதனைகள் :**

| | |
|---|---|
| 1. கர்ப்பிணி தாய்மார்கள் பதிவு செய்தல் | 5662 |
| 2. கர்ப்பிணி தாய்மார்களுக்கு இசிவு நோய் தடுப்பூசி | 5662 |
| 3. நடைபெற்ற பிரசவங்கள் | 5185 |
| 4. காசநோய் தடுப்பூசி | 5156 |
| 5. முத்தடுப்பூசி | 5467 |
| 6. போலியோ நோய்த்தடுப்பு சொட்டு மருந்து | 5479 |
| 7. தட்டம்மை தடுப்பூசி | 5558 |
| 8. இருமுனை தடுப்பூசி குழந்தைகளுக்கு (10 years) | 26047 |
| (16 years) | 27478 |
| 9. வைட்டமின் ஏ மருந்து | 33903 |

**குடும்ப நலத்திட்ட சாதனைகள் :**

| | |
|---|---|
| 1. குடும்ப நல அறுவை சிகிச்சைகள் | 59084 |
| 2. கருத்தடை வளையங்கள் பொருத்துதல் | 10805 |
| 3. வாய்வழி மாத்திரைகள் | 653 |
| 4. நிரோத் | 899 |

ஒவ்வொரு குடும்ப நலமையமும் சராசரியாக 50,000 மக்கட் தொகைகள் உள்ளடக்கி பணியாற்றி வருகின்றது. குடும்ப நலம் மற்றும் தாய் சேய் நல பணியாளர்கள் மக்கள் தொகை கணக்கெடுப்பு செய்து, தகுதி வாய்ந்த தம்பதியர் குறிப்பேடுகள் தயார் செய்து குடும்ப நலப்பணி செய்து வருகின்றார்கள்.

எல்லா பெண் மருத்துவ அலுவலர்களுக்கும், குடும்ப நல அறுவை சிகிச்சை செய்வதற்கும், கருத்தடை வளையம் பொருத்துவதற்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் எல்லா பகுதி சுகாதார செவிலியர்கள் மற்றும் நகரசுகாதார செவிலியர்களுக்கு கருத்தடை வளையம் பொருத்துவதற்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

அனைத்து பள்ளிக்குழந்தைகளுக்கும் செப்டம்பர் 2024, மற்றும் மார்ச் 2025 மாதத்தில் குடல்புழு நீக்க மாத்திரைகள் வழங்கப்பட்டது. மேலும் மாநகராட்சி நகர்நல மையங்களில் மகப்பேறு தாய்மார்களுக்கு Ultra Scan மற்றும் பரிசோதனைகள் எடுக்கப்படும்.

தாய் சேய் நலம் மற்றும் குடும்ப நலத்துறையின் கீழ் பணியாற்றும் பணியாளர்கள் அன்றாடம் வீடு வீடாக சென்று தாய் சேய் நலம் மற்றும் குடும்ப நலம் பற்றி எடுத்துக் கூறி வருகின்றனர். தகுதி வாய்ந்த தம்பதியரை சந்தித்து குடும்ப நல முறைகள் பற்றி விளக்கமாக எடுத்துக் கூறி மாத்திரை முறை மற்றும் நிரோத் முறைகள் பற்றி தனித்தனியாகவும், குழுக்களாகவும் தாய்மார்களை சந்தித்து எடுத்துக் கூறி வருகின்றனர்.

**குடும்ப நலத்திட்டத்தின் சாதனைகள் :**

| | | |
|---|---|---|
| 1 | 2011-12ம் ஆண்டு மாநகராட்சியின் மக்கட்தொகை 2011 Census- படி மற்றும் 2024 மார்ச் 31-ன்படி மக்கட் தொகை | 474838<br>601454 |
| 2 | குடும்ப நலத்துறையின் பணியாளர்களின் பணி செய்யும் மக்கட்தொகை | 524116 |
| 3 | தகுதி வாய்ந்த தம்பதியரின் எண்ணிக்கை | 99240 |
| 3அ | குடும்ப நல முறைகளை ஏற்றுக்கொண்ட தகுதி வாய்ந்த தம்பதியரின் எண்ணிக்கை | 71591 |
| 4. | அறுவை சிகிச்சை முறை | 59084 |
| 5 | கருத்தடை வளையம் | 10805 |
| 6 | வாய்வழி மாத்திரை | 653 |
| 7 | நிரோத் | 899 |
| 8 | அந்தாரா | 150 |

தற்போது தேசிய சுகாதார இயக்கம் மூலம் மாநகராட்சியில் செயல்பட்டு வந்த நகர்நல மையங்கள், மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்களை ஒன்றாக இணைத்து 10 நகர்புற ஆரம்ப சுகாதார மையங்களாக உருவாக்கப்பட்டு கீழ்காணும் விபரப்படி ஜனவரி 2015 முதல்

செயல்படுத்தப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் 50000 மக்கள் தொகை உள்ளடக்கி செயல்பட்டு வருகின்றது.

| வ.எண் | நகர்புற ஆரம்ப சுகாதார மையம் பெயர் | முகவரி |
|---|---|---|
| 1 | பேட்டை நகர்புற ஆரம்ப சுகாதார மையம் | பேட்டை |
| 2 | பழைய பேட்டை நகர்புற ஆரம்ப சுகாதார மையம் | பழைய பேட்டை |
| 3 | பாட்டபத்து நகர்புற ஆரம்ப சுகாதார மையம் | தொட்டி பாலத்தெரு பாட்டபத்து |
| 4 | எம்.வி.புரம் நகர்புற ஆரம்ப சுகாதார மையம் | மேலவீரராகவபுரம் திருநெல்வேலி சந்திப்பு |
| 5 | கொக்கிரகுளம் நகர்புற ஆரம்ப சுகாதார மையம் | சாலைத்தெரு வண்ணார்பேட்டை |
| 6 | சமாதானபுரம் நகர்புற ஆரம்ப சுகாதார மையம் | மனகாவலம்பிள்ளை மருத்துவமனை பாளையங்கோட்டை |
| 7 | பாளையங்கோட்டை நகர்புற ஆரம்ப சுகாதார மையம் | பாளை பேரூந்து நிலையம் அருகில் |
| 8 | பெருமாள்புரம் நகர்புற ஆரம்ப சுகாதார மையம் | பெருமாள்புரம் |
| 9 | மேலப்பாளையம் நகர்புற ஆரம்ப சுகாதார மையம் | மேலப்பாளையம் மண்டல அலுவலக வளாகம் |
| 10 | தச்சநல்லூர் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் | தச்சநல்லூர் டவுண் ரோடு |

மேற்படி தேசிய நகர்புற ஆரம்ப சுகாதார மையங்களுக்கு தேவையான மருந்துகள் மற்றும் தளவாடச்சாமான்கள் வாங்குவதற்கு தேவையான நிதி தேசிய நகர்ப்புற சுகாதார இயக்ககம் மூலமாக வழங்கப்படுகிறது.

புதிய பேருந்து நிலையம், பாளை பேருந்து நிலையம், சந்திப்பு பேருந்து நிலையம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம் ஆகியவற்றில் தாய்மார்கள் பச்சிளம் குழந்தைகளுக்கு பாலூட்டுவதற்கு ஏதுவாக பாலூட்டும் அறைகள் திறக்கப்பட்டு அருகில் உள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர்கள் மூலம் கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

ஆரம்ப சுகாதார நிலையங்களில் 3 மாதத்திற்குள் பதிவு செய்து, தாய் சேய்நல எண் (RCH-ID) பெறும் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கப்படுகிறது. மேலும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்களில் பிறக்கும் குழந்தைகளுக்கு Child Care Kit இலவசமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**நோய் தடுப்பூசி திட்டம்:**

தேசிய தடுப்பூசி திட்டத்தின் கீழ் அனைத்து தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் ஆறு விதமான உயிர் கொல்லி நோய் வராமல் தடுப்பதற்கு தடுப்பூசிகள் கொடுக்கப்பட்டு வருகின்றது.

**கீழ்க்கண்ட தடுப்பூசிகள் போடப்பட்டு வருகின்றது :**

| வ. எண் | தடுப்பூசி வகைகள் | தடுப்பூசி போடப்படும் காலங்கள் |
|---|---|---|
| 1 | பிசிஜி மற்றும் ஜிரோ போலியோ (BCG, OPV-O, Hepatitis B Birth dose) | குழந்தை பிறந்த உடன் போடப்படுகின்றது |
| 2 | Pentavalent – 1, OPV 1, Rota 1 & IPV -1, PCV - 1 | குழந்தை பிறந்த 6வது வாரம் |
| 3 | OPV 2 Pentavalent 2 | 10வது வாரம் |
| 4 | OPV 3 Pentavalent 3, Rota 3, IPV 2, PCV 2 | 14 வாரம் |
| 5 | Measles (mcv 1) or MR-1, PCV – B | குழந்தைகளுக்கு 9வது மாதம் முதல் 12வது மாதம் வரை |
| 6 | MR-2, DPT-1, OPV-B | 16வது மாதம் முதல் 24 மாதம் வரை |
| 7 | DPT – II B | 5-6வது வயதில் |
| 8 | இசிவு நோய் தடுப்பூசி (DT) | குழந்தைகளுக்கு 10 வயதிலும், 16 வயதிலும் |
| 9 | இசிவு நோய் தடுப்பூசி கர்ப்பிணி தாய்மார்களுக்கு (DT) | கர்ப்பமான 4வது மாதம், 5வது மாதத்தில் 2 ஊசிகள் வழங்கப்படும் |
| 10 | வைட்டமின் ஏ சொட்டு மருந்து | குழந்தைகளுக்கு வைட்டமின் ஏ சத்து குறைவினால் ஏற்படும் மாலைக்கண் நோயை தடுப்பதற்கு 6 மாதம் முதல் 5 வயது வரை 6 மாத இடைவெளியில் வழங்கப்படுகிறது |
| 11 | இரும்புசத்து மாத்திரைகள் | இரும்பு சத்து குறைவினால் குழந்தைகளுக்கும். தாய்மார்களுக்கும் ஏற்படும் இரத்த சோகை நோயை தடுப்பதற்கு கொடுக்கப்படுகிறது |

| | | |
|---|---|---|
| 12 | குடற்புழு நீக்க மாத்திரைகள் | 1 வருடம் முதல் 19 வயது வரை குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது |

**தெருநாய்:**

திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதிகளில் தெருவில் சுற்றித் திரியும் நாய்களை பிடித்து கருத்தடை செய்து, நாய்களுக்கு கருத்தடை செய்யப்பட்டு வெறிநோய் தடுப்பூசியும் போடப்பட்டு வருகின்றது. இதன்மூலம் நாய்களின் இனப்பெருக்கம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

**கொசு தடுப்பு நடவடிக்கைகள் :**

கொசு தொல்லையை கட்டுப்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு சுகாதார ஆய்வாளர்களுக்கு பொறுப்பு நிர்ணயம் செய்யப்பட்டு மாநகர பகுதிகளில் நிலையான கொசு புழு உற்பத்தி ஆகும் இடங்கள் கண்டறியப்பட்டு அவற்றினை ஒழிக்க முன்பயணத்திட்டம் தயார் செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது. இப்பணிக்காக 29 கைத்தெளிப்பான்கள் மற்றும் 28 Pulse fogging இயந்திரங்களைக் கொண்டு சிறிய தெருக்களுக்கும், முக்கிய சந்துகளிலும் கொசு புகை மருந்து அடிக்கப்பட்டு வருகின்றது. மேலும் புகை மருந்து அடிக்கும் வாகனம் இரண்டு மூலம் கொசுபுகை மருந்து அடிக்கப்பட்டு வளர்ந்த கொசுக்கள் அழிக்கப்படுகின்றன. மேலும் டெங்கு தடுப்பு பணிக்கு டெங்கு தடுப்பு களப்பணியாளர்கள் 300 வீடுகளை வாரம் ஒருமுறை ஆய்வு செய்து கொசுப்புழுக்களை கண்டறிந்து அழிக்கவும், கொசு உற்பத்தி ஆகும் இடங்களை அகற்றவும் பணியாளர்கள் தினக்கூலி அடிப்படையில் நியமிக்கப்பட்டு, டெங்குவால் இறப்பு நிகழ்வு தடுக்கப்பட்டுள்ளது.

**பிறப்பு விகிதமும், தாய் சேய் நல உதவியும்:**

| | |
|---|---|
| 2024-ம் ஆண்டின் பிறப்புகள் | 8334 |
| பிறப்பு விகிதம் | 13.8 |
| இறப்பு விகிதம் | 6.61 |
| சிசு மரண விகிதம் | 6.5 |
| மகப்பேறு மரணவிகிதம் | 77 |

**இறப்பு விகிதமும் கொள்ளை நோய்களும்:**

நடப்பு ஆண்டில் பதிவு செய்யப்பட்டுள்ள இறப்புகள் 3981 ஆகும். இறப்பு விகிதம் 1000-க்கு 6.61 ஆகும்.

**டைபாய்டு காய்ச்சல்:**

டைபாய்டு காய்ச்சல் வராமல் தடுப்பதற்கு எல்லா முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளது.

**கொள்ளை நோய்:**

மக்களை கொல்லும் கொள்ளை நோய் பரவவில்லை.

**தொண்டை அடைப்பான் நோய்:**

தொண்டை அடைப்பான் நோய் கண்டுள்ளதற்கான நிகழ்வுகள் எதுவும் இல்லை.

**தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் 2024 - 2025**

நகர்புறத்தில் ஏழைகள் அமைப்பு சாராபகுதி செயல்பாட்டில் உள்ளனர். அவர்களுக்கு பொருளாதார முன்னேற்றம், சுகாதார மேம்பாடு, சமூக அளவில் ஏற்படும் வன்முறை மற்றும் பாதுகாப்பற்ற நிலையை மாற்றுதல், சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவை உருவாக்கவும், தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் செயல்பட்டு வருகிறது.

மேலும் குடியிருப்பில் நலிவடைந்த நிலை, சமூகத்தில் நலிவடைந்த நிலை மற்றும் வேலையில் நலிவடைந்த நிலை ஆகியவை ஒன்றுக்கொன்று தொடர்புடையவனவாகும். நகர்ப்புற ஏழ்மையிலே மிகவும் பாதிப்பிற்குள்ளான பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியோர், தாழ்த்தப்பட்டடோர், பழங்குடியினர், சிறுபான்மையினர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் இத்திட்டத்தின் இலக்கு மக்கள் ஆவர்.

**நகர்ப்புற சாலையோர வியாபாரிகளுக்கு உதவுதல் (SUSV – Support to Urban Street Vendors):**

தெருவோர வியாபாரிகளுக்கு நிறுவனங்கள் மூலம் கடன் பெற வசதி செய்தல், சமூக பொருளாதாரம் குறித்த களஆய்வு செய்தல், அவர்களை பதிவு செய்தல் மற்றும் அவர்களுக்கு அடையாள அட்டை வழங்குவது போன்ற உதவிகளை செய்யும் நகர்ப்புற தெருவோர வியாபாரிகளுக்கு உதவுவதற்கான நகர்ப்புற திட்டங்கள் தயாரிக்க உதவுதல், வியாபாரத்திற்கான இடவசதி செய்வது ஆகும்.

**நகரங்களில் வீடற்றோருக்கான உறைவிடம் (Scheme for Urban Homeless):**

நகர்ப்புறங்களில் வறுமையில் வாடுபவர்களுக்கு அத்தியாவசியமான சேவைகளை அளிப்பதாகும். வீடற்றவர்கள் அதிகமாக இருக்கக்கூடிய இடங்களுக்கு மையமாகவும், வேலை செய்யும் இடத்திற்கு சென்றுவர ஏதுவாக இருக்கக்கூடிய இடங்களில் உறைவிடம் அமைக்கப்பட வேண்டும். சமூக பாதுகாப்பு உரிமைகள், உணவு, கல்வி மற்றும் நலவாழ்வு சேவைகள் ஆகியவைகள் அளிக்கும்படி பயனாளிக்கு ஏற்ப இடவசதிகள் இருக்க வேண்டும்.

**பிரதான் மந்திரி மாத்ரு வந்தன யோஜனா மற்றும் டாக்டர்.முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டம் (PMMVY-MRMBS)**

திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதியில் .10 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகிறது. இப்பகுதியில் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் பதிவு செய்து, தாய்சேய் நல எண் (RCH ID) பெற்ற அனைத்து கர்ப்பிணி தாய்மார்களுக்கும் 3வது மாதத்தில் (ரூ.2000) மற்றும் 6வது மாதத்தில் (ரூ.2000) இரண்டு தவணைகளாக ரூ.4000 வழங்கப்படும். மேலும் ரூ.2000 மதிப்புள்ள இரண்டு ஊட்டச்சத்து பெட்டகமும் வழங்கப்படும். அரசு மருத்துவமனைகளில் பிரசவம் நடைபெற்றால் அதற்கான ரூ.4000 மற்றும் குழந்தை பிறந்த பின்பு மூன்றாம் தவணை Penta & Polia, IPV 2, Rota

போடப்பட்டிருந்தால் அதற்காக ரூ.4000 மற்றும் 9-12வது மாதத்தில் போடப்படும் தட்டம்மை தடுப்பூசி போடப்பட்டால் அதற்காக ரூ.2000 என மொத்தம் ரூ.18000 இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் முழுத்தொகையும் முதல் இரண்டு பிரசவத்திற்கு மட்டுமே பொருந்தும். மூன்றாவது மற்றும் அதற்கு மேற்பட்ட பிரசவத்திற்கு முதல் தவணை ரூ.2000 மற்றும் ஊட்டச்சத்து பெட்டகம் மட்டுமே வழங்கப்படும். இத்திட்டத்தினால் சிசு இறப்பு விகிதம் மற்றும் மகப்பேறு மரண விகிதம் குறைகிறது. அனைத்து கர்ப்பிணி தாய்மார்களையும் எளிதாக கண்காணிக்கலாம். மேலும் இத்திட்டத்தின் கீழ் 2024-2025-ல் 4140 கர்ப்பிணி தாய்மார்கள் பயனடைந்துள்ளனர்.

**ஜனனி சுரக்ஷா யோஜனா திட்டம் (JSY):**

JSY திட்டம் என்பது Government Health Centre PHC, CHC, FRU District, Sub District, Medical College Hospital இவைகளில் பேறுகாலம் ஆகக்கூடிய தாய்மார்களுக்கும் ரூ.600/- வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் முதல் இரண்டு பேறுகாலத்திற்கு மட்டுமே இத்தொகை வழங்கப்படுகிறது. JSY தொகையினை பயனாளிகள் வங்கி கணக்கில் NEFT மூலம் வரவு வைக்கப்பட்டு வருகிறது. 2024 - 2025 -ல் திருநெல்வேலி மாநகராட்சியில் 7 UPHC-களில் கீழ்க்கண்ட எண்ணிக்கையில் தாய்மார்கள் பயனடைந்து உள்ளனர்.

| | |
|---|---|
| மேலப்பாளையம் | 17 |
| பாளையங்கோட்டை | 16 |
| பேட்டை | 25 |
| மேலவீரராகவபுரம் | 8 |
| சமாதானபுரம் | 24 |
| தச்சநல்லூர் | 25 |
| பெருமாள்புரம் | 11 |
| மொத்த தாய்மார்களின் எண்ணிக்கை | 121 |

**தேசிய நகர்ப்புற நலவாழ்வு இயக்கம் (NUHM):**

தேசிய நகர்ப்புற நல்வாழ்வு திட்டத்தின் மூலம் 10 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் ஒவ்வொரு மாதமும் 3 சிறப்பு மருதுதுவ முகாம் நடத்தப்படுகின்றது.

- இம்முகாமில் பொது மருத்துவம், கண் பரிசோதனை, கர்ப்பிணி பெண்களுக்கான சிறப்பு பரிசோதனை மற்றும் ஊட்டச்சதது மருத்துவம், குழந்தைகளுக்கான சிறப்பு பரிசோதனை மற்றும் ஊட்டச்சத்து மருத்துவம்
- ஒவ்வொரு மாதமும் 9ம் தேதி மகப்பேறு சிறப்பு முகாம் நடைபெறுகின்றது. தடுப்பூசி திட்டம், பேறுகால மற்றும் குழந்தை நலத்திட்டம், மழைக்கால தொற்றுநோய்கள் வராமல் தடுத்தல், உயிர்கொல்லி நோய்கள் பற்றிய விழிப்புணர்வு பிரச்சாரங்கள் செய்தல்

➢ அனைத்து பள்ளி குழந்தைகளுக்கும் நிலவேம்பு குடிநீர் வழங்குதல் மற்றும் நோய் எதிர்ப்பு சக்திக்கான மருந்துகள் வழங்குதல் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

**மக்களைத் தேடி மருத்துவம்**

திருநெல்வேலி மாநகராட்சியில் 10 நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன. தொற்றாத நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக பல்வேறு மருத்துவமனைகளுக்கு நோயாளிகள் வருவதைக் குறைக்கும் வகையில் மக்களைத் தேடி மருத்துவம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டம் வீட்டு வாசலுக்கு செல்லும் சுகாதாரத் திட்டமாகும். இத்திட்டத்தில் இரண்டு பிசியோதெரபி மருத்துவர்கள் மற்றும் இரண்டு செவிலியர்கள் உள்ளனர். அவர்கள் மக்களைத் தேடி மருத்துவத்திற்கு என ஒதுக்கப்பட்ட வாகனத்தின் மூலம் வீடு வீடாக சென்று, உயர் இரத்தஅழுத்த நோயாளிகள், சர்க்கரை நோயாளிகள், கை மற்றும் கால்கள் செயல் இழந்த நோயாளிகள் விபரம் சேகரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | நோயாளியின் விபரம் | 2024 ஏப்ரல் முதல் 2025 மார்ச் வரை கண்டறியப்பட்டவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | உயர் இரத்த அழுத்த நோயாளிகள் | 95275 |
| 2. | சர்க்கரை நோயாளிகள் | 50952 |
| 3. | உயர் இரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை நோயாளிகள் | 45014 |

மக்களைத் தேடி மருத்துவ திட்ட மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் வீடு வீடாக சென்று நோயாளிகளை பரிசோதனை செய்து ஒரு மாதத்திற்கான மருந்து வழங்கி வருகின்றனர். கை கால் செயலிழந்த நோயாளிகளுக்கு physiotherapy செய்யப்படுவதன் மூலம் நோயாளிகள் பயன்பெற்று வருகின்றனர்.

தேசிய நகர்ப்புற சுகாதார இயக்கத்தின் கீழ் இயங்கும் மக்களைத் தேடி மருத்துவத்தில் பணிபுரியும் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கு 2024-2025-ம் நிதியாண்டிற்கு ரூ.5,48,750 ஊதியம் வழங்கப்படுகிறது. மக்களைத் தேடி மருத்துவ வண்டி வாடகைக்கு 2024-2025-ம் நிதியாண்டிற்கு ரூ.7,20,000 செலவிடப்பட்டுள்ளது என்ற விபரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**நகர்ப்புற நல வாழ்வு மையம்**

தேசிய நகர்ப்புற நல்வாழ்வு நிதியின் கீழ் 20 நகர்ப்புற நல வாழ்வு மையம் கட்டுவதற்கு, 5,00,00,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு முதற்கட்டமாக 10 நகர்ப்புற நல வாழ்வு மையம் கட்டிமுடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 06.06.2023 அன்று

திறக்கப்பட்டு தற்போது செயல்பட்டுவருகிறது. மேற்படி நகர்ப்புற நல வாழ்வு மையத்திற்கு 10 மருத்துவ அலுவலர்கள், 10 செவிலியர்கள், 10 சுகாதார ஆய்வாளர்கள், 10 பல்நோக்கு சுகாதார பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இரண்டாவது கட்டமாக 10 நகர்ப்புற நல வாழ்வு மையம் கட்டிமுடிக்கப்பட்டு, திறப்பதற்கு தயார் நிலையில் உள்ளது.

**அம்மா உணவகம்:**

திருநெல்வேலி மாநகராட்சியில் 02.06.2013 முதல் 10 அம்மா உணவகங்கள் துவங்கப்பட்டு மகளிர் சுயஉதவிக்குழுக்களில் உள்ள 116 பணியாளர்கள் மூலம் நடத்தப்பட்டு வருகின்றது. அம்மா உணவகங்களில் இட்லி ஒன்று ரூ.1/-க்கும், சாம்பார் சாதம் ரூ.5/-க்கும், தயிர்சாதம் ரூ.3/-க்கும் வழங்கப்படுகின்றது. நாளொன்றுக்கு ஒவ்வொரு அம்மா உணவகத்திலும் காலையில் 1200 இட்லியும், 300 சாம்பார் சாதம் மற்றும் 300 தயிர்சாதமும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அம்மா உணவகங்களில் உணவருந்துவோருக்கு R.O. Filter குடிநீரும், சுகாதாரமான உணவருந்தும் அரங்கமும் அமைக்கப்பட்டு வறுமையிலுள்ள மக்கள் பயன்பெறும் வசதி செய்யப்பட்டுள்ளது.

**PMSVANidhi Loan (பிரதம மந்திரி திட்டத்தின் கீழ் கடன் வழங்குதல்)**

திருநெல்வேலி மாநகராட்சியில் பகுதியில் சாலையோர வியாபாரிகளுக்கு முதல் தவணை 10,000 இரண்டாம் தவணை 20000 மூன்றாம் தவணை 50000 வழங்கப்பட்டு மற்றும் புதியதாக கடன் உதவி பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**ஆதிதிராவிடர்/பழங்குடியினர் இறந்தவரின் குடும்பத்திற்கு ஈமக்கிரியை தொகை வழங்குதல்**

திருநெல்வேலி மாநகராட்சி பகுதியில் வசிக்கும் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் இறந்தால் இறந்தவரின் குடும்பத்திற்கு ஈமக்கிரியை தொகையாக ரூ.5000/- வீதம் 78 பயனாளிகளுக்கு ஈமக்கிரியை தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**மாண்புமிகு முதலமைச்சர் காலை உணவு திட்டம்**

திருநெல்வேலி மாநகராட்சி பகுதியில் உள்ள 40 மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு காலை உணவாக வெண்பொங்கல், காய்கறி சாம்பார், வெள்ளை ரவை, அரிசி ரவை ஆகியவை வழங்கப்படுகின்றது.

10/6/25

மாநகர நல அலுவலர்(பொ)
திருநெல்வேலி மாநகராட்சி

10.6.25

திருநெல்வேலி மாநகராட்சி

கணக்கு பிரிவு - நிர்வாக அறிக்கை

2024-2025 ஆம் ஆண்டு பலதரப்பட்ட கணக்குகளின் வரவு செலவு பற்றிய விபரம் கீழ்கண்டுள்ளவாறு உள்ளது.

| இனம் | வரவு ரூ. கோடியில் | செலவு ரூ. கோடியில் |
|---|---|---|
| பொது நிதி | 140.04 | 151.32 |
| ஆரம்ப கல்வி நிதி | 9.99 | 2.72 |
| குடிநீர் மற்றும் வடிகால் நிதி | 30.13 | 42.37 |
| மொத்தம் | 180.16 | 196.41 |

மானியங்கள் :

இம்மாநகராட்சி கணக்கில் அறிக்கை ஆண்டில் ரூ.26421.08 இலட்சம் அரசு மானியம் கிடைக்கப்பெற்றுள்ளது. இது குறித்த விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

## GRANT 2024-25

## REVENUE FUND

| S.no | Account Head | Details | Amount (Rs.) |
|---|---|---|---|
| **INCOME GRANT** | | | |
| 1 | 1601004 Devolution Fund (Including SFC) | SFC - Devolution Fund | 70,93,45,728 |
| 2 | 1201001 - Duty on Transfer of Property | Assisgned Revenue Surcharge on Stampduty | 14,71,31,333 |
| 3 | 1702001-DIVIDENT ON SHARES | DIVIDENT SHARES TUFIDCO | 1,50,000 |
| | | | 85,66,27,061 |
| | | | |

## CAPITAL REVENUE

| | | | |
|---|---|---|---|
| 4 | 3203002 GRANTS FROM THE GOVERNMENT | Smart City Mission | 99,00,00,000 |
| 5 | 3203002 Grant from the Government | Morning Breakfast (common kitchen) | 74,04,684 |
| 6 | 3203002 GRANTS FROM THE GOVERNMENT | 15th CFC tied & untied grant | 3,36,00,000 |
| 7 | 3203002 GRANTS FROM THE GOVERNMENT | 15th CFC tied grant (23-24) | |
| 8 | 3203002 GRANTS FROM THE GOVERNMENT | Turip( Savings scheme) | 38,08,73,103 |
| 9 | 3203002 GRANTS FROM THE GOVERNMENT | Turip (2023-24) | |
| 10 | 3203002 GRANTS FROM THE GOVERNMENT | 15th finance commission (wellness centre) | 3,36,00,000 |
| 11 | 3203002 GRANTS FROM THE GOVERNMENT | SFC -URDF(2022-2023&2023-24) | 2,48,80,000 |
| 12 | 3203002 GRANTS FROM THE GOVERNMENT | Iudm | - |
| 13 | 3203002 GRANTS FROM THE GOVERNMENT | TNSUDP PSGF GRANT | - |
| 14 | 3203002 GRANTS FROM THE GOVERNMENT | MLA FUND | 4,90,70,877 |
| 15 | 3203002 GRANTS FROM THE GOVERNMENT | NSMT 22-23 &23-24 | 6,30,44,288 |
| 16 | 3203002 GRANTS FROM | PMJKV | 1,35,85,231 |

| | | | |
|---|---|---|---|
| | THE GOVERNMENT | | |
| 17 | 3203002 GRANTS FROM THE GOVERNMENT | CGF | 1,84,44,709 |
| 18 | 3203002 GRANTS FROM THE GOVERNMENT | DORMANT AND INTEREST FUND (2023-24) | 3,08,18,305 |
| 19 | 3203002 GRANTS FROM THE GOVERNMENT | SFC ARREAR FUND | 72,00,000 |
| 20 | 3203002 GRANTS FROM THE GOVERNMENT | SFC INCENTIVE FUND | 2,68,00,000 |
| 21 | 3203002 GRANTS FROM THE GOVERNMENT | nammaku nammae thittam | 48,03,045 |
| 22 | 3203002 GRANTS FROM THE GOVERNMENT | PROPERTY TAX FOR GOVT BUILDINGS | 96,894 |
| | | **Total** | 1,68,42,21,136 |
| | | **Grant Total** | 2,54,08,48,197 |

| WATER SUPPLY GRANT 23-24 | | | |
|---|---|---|---|
| S.no | Account Head | Details | Amount (Rs.) |
| 1 | 3203002 GRANTS FROM THE GOVERNMENT | ugss phase 2 | 10,12,60,000 |
| | | | 10,12,60,000 |

உதவி தொகை:

இம்மாநகராட்சிக்கு அரசின் பிற துறைகளின் மூலம் வசூலிக்கப்பட்ட கீழ்கண்ட பங்குத் தொகை வரவு வந்துள்ளது.

முத்திரை கட்டண மிகுவரி :ரூ.1471.31 இலட்சம்

## செலவினங்கள் (2024-2025)

இம்மாநகராட்சி அறிக்கையாண்டில் மொத்தம் செலவு ரூ.28740.37 லட்சங்கள். அதன் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1. பணியாளர் ஊதியம் | |
| ஊதியம் | : 2579.93 |
| இதர செலவுகள் | : 1912.99 |
| 2. ஓய்வூதியம் | : 3656.82 |
| 3. இயக்க செலவுகள் (மின்கட்டணம் தினக்கூலி ஊதியம் - பொது சுகாதாரம் | : 2717.47 |
| 4. பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு | : 8250.76 |
| 5. திட்ட செலவுகள் (தொழில்நுட்ப கட்டணம் பொருட்காட்சி செலவு) | : ---- |
| 6 நிர்வாக செலவுகள் | :1003.28 |
| 7. நிதி செலவுகள் (கடனுக்குரிய வட்டி தொகை ஐயப்பாடு உள்ள வரவினம் முதலியன) | : |
| 8. சொத்துக்கள் தேய்மானம் வகை | :8619.12 |

உதவி ஆணையாளர் (கணக்குகள்)
திருநெல்வேலி மாநகராட்சி

11/6/25

# திருநெல்வேலி மாநகராட்சி
# பொறியியல் பிரிவு
# நிர்வாக அறிக்கை 2024-25

**குடிநீர் விநியோகம்**

திருநெல்வேலி மாநகராட்சியின் பரப்பளவு 108.65 ச.கி.மீ ஆகும். இம்மாநகராட்சியின் 2024-25 ஆம் ஆண்டு மக்கள் தொகை 601454 ஆகும். இம்மாநகராட்சியில் மொத்தம் 55 வார்டுகள் உள்ளன. தற்போது தினசரி பழைய குடிநீர்த் திட்டம் மூலம் 58 MLD யும், புதிய அரியநாயகிபுரம் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் மூலம் 25 MLD யும், ஆக மொத்தம் 83 MLD குடிநீர் பெறப்பட்டு 152 LPCD வீதம் 55 வார்டுகளில் தினசரி 52 வார்டுகளுக்கும், 3 வார்டுகளுக்கு இரண்டு நாட்களுக்கு ஒரு முறையும் என்ற அடிப்படையில் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மாநகராட்சிப் பகுதியில் மொத்தம் 87713 எண்ணம் குடிநீர் வீட்டிணைப்புகளும் 1754 பொது நல்லிகள் மற்றும் 274 எண்ணம் சிறுமின் விசை பம்புகள் உள்ளன.

**பள்ளிகள்**

திருநெல்வேலி மாநகராட்சி பகுதியில் 34 ஆரம்ப பள்ளிகள், 5 நடுநிலைப் பள்ளிகள், 1 உயர்நிலைப் பள்ளிகள், 5 மேல்நிலைப்பள்ளிகள் ஆக மொத்தம் 45 பள்ளிகள் அமைந்துள்ளன.

**தெருவிளக்குகள்**

திருநெல்வேலி மாநகராட்சி பகுதிகளில் மொத்தம் 31214 தெருவிளக்குகள் உள்ளன.

| | | |
|---|---|---|
| 20 வாட்ஸ் எல்.இ.டி. விளக்கு | : | 15122 எண்ணம் |
| 25 வாட்ஸ் எல்.இ.டி. விளக்கு | : | 867 எண்ணம் |
| 40 வாட்ஸ் எல்.இ.டி. விளக்கு | : | 2407 எண்ணம் |
| 60 வாட்ஸ் எல்.இ.டி. விளக்கு | : | 5180 எண்ணம் |
| 90 வாட்ஸ் எல்.இ.டி. விளக்கு | : | 6973 எண்ணம் |
| 120 வாட்ஸ் எல்.இ.டி. விளக்கு | : | 170 எண்ணம் |
| 200 வாட்ஸ் எல்.இ.டி. விளக்கு | : | 495 எண்ணம் |

**மாநகராட்சியின் தலைமை நீரேற்று நிலையங்களின் விபரம் :**

| வ.எண் | திட்டத்தின் பெயர் | துவங்கப்பட்ட வருடம் | வடிவமைக்கப்பட்ட கொள்ளவு எம்.எல்.டி | தற்போதைய குடிநீர் வழங்கும் அளவு எம்.எல்.டி | மண்டலம் |
|---|---|---|---|---|---|
| 1 | கொண்டாநகரம் (திருநெல்வேலி) | 1983 | 12.00 | 8.85 | திருநெல்வேலி |
| 2 | கொண்டாநகரம் (திருநெல்வேலி) ஸ்ரீனிவாசநகர் | 2016 | 0.72 | 0.50 | திருநெல்வேலி |
| 3 | கொண்டாநகரம் (மேலப்பாளையம்) | 1992 | 9.00 | 6.13 | மேலப்பாளையம் |
| 4 | சுத்தமல்லி (புதியது & KFW சிப்பம் 1) | 2007 & 2013 | 8.06 | 3.80 | தச்சநல்லூர் |
| 5 | சுத்தமல்லி (பழையது) | 2000 | 1.69 | 1.30 | தச்சநல்லூர் |
| 6 | சுத்தமல்லி (KFW -சிப்பம் 2) | 2013 | 7.60 | 7.50 | மேலப்பாளையம் |
| 7 | குறுக்குத்துறை | 1961 | 4.20 | 3.12 | தச்சநல்லூர் |
| 8 | தீப்பாச்சியம்மன் கோவில் (தச்சநல்லூர்) | 1990 | 1.20 | 0.50 | தச்சநல்லூர் |
| 9 | தீப்பாச்சியம்மன் கோவில் | 1986 | 1.60 | 0.50 | பாளையங்கோட்டை |
| 10 | கருப்பந்துறை | 1987 | 1.14 | 0.60 | மேலப்பாளையம் |
| 11 | தருவை | 2016 | 2.40 | 1.60 | மேலப்பாளையம் |
| 12 | மணப்படைவீடு (பழையது) | 1956 | 9.30 | 3.40 | பாளையங்கோட்டை |
| 13 | மணப்படைவீடு (புதியது) | 1978 | 9.00 | 7.00 | பாளையங்கோட்டை |
| 14 | திருமலைக்கொழுந்துபுரம் (பழையது) கே.டி.சி நகர் | 2001 | 3.40 | 3.10 | பாளையங்கோட்டை |
| 15 | திருமலைக்கொழுந்துபுரம் (புதியது) (DRO Quarters) | 2006 | 7.80 | 5.10 | பாளையங்கோட்டை |
| 16 | அரியநாயகிபுரம் | 2023 | 50.00 | 30.00 | நான்கு மண்டலங்களும் |
| | **மொத்தம்** | | **129.11** | **83.00** | |

**மாநகராட்சி சாலைகளின் விபரம் :**

| | | |
|---|---|---|
| சிமெண்ட் சாலைகள் | : | 185.36 கி.மீ |
| தார்ச்சாலைகள் | : | 648.74 கி.மீ |
| பேவர் சாலைகள் | : | 12.67 கி.மீ |
| மண்தள சாலைகள் | : | 88.46 கி.மீ |
| கல்தள சாலைகள் | : | 0.43 கி.மீ |
| **மொத்த சாலைகளின் நீளம்** | : | **935.66கி.மீ** |

| | | |
|---|---|---|
| **மழைநீர் வடிகால் நீளம்** | : | 299.45 கி.மீ. |
| **சிறுபாலங்களின் எண்ணிக்கை** | : | 1094 எண்ணம் |

## திட்டப்பணிகளின் விபரம்:

**சாலைகள்**

திருநெல்வேலி மாநகராட்சியில் 2023 - 24 - ம் ஆண்டில் பல்வேறு திட்டத்தின் கீழ் 87.569 கி.மீ நீளத்திற்கு 498 சாலைப்பணிகள் ரூ.40.30 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு 474 சாலைப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள சாலைப்பணிகள் நடைபெற்று வருகின்றது.

திருநெல்வேலி மாநகராட்சியில் 2024 - 25 - ம் ஆண்டில் பல்வேறு திட்டத்தின் கீழ் 82.636 கி.மீ நீளத்திற்கு 387 சாலைப்பணிகள் ரூ.43.90 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு 283 சாலைப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள சாலைப்பணிகள் நடைபெற்று வருகின்றது.

திருநெல்வேலி மாநகராட்சியில் 2025 - 26 - ம் ஆண்டில் பல்வேறு திட்டத்தின் கீழ் 56.373 கி.மீ நீளத்திற்கு 373 சாலைப்பணிகள் ரூ.36.18 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ளது.

**15வது மத்தியநிதி குழு திட்டம் 2022 - 23 (கட்டப்பட்ட மற்றும் கட்டப்படாத மானியம்)**

திருநெல்வேலி மாநகராட்சியில் 15வது மத்தியநிதி குழு 2022 - 23 கட்டப்படாத மானியத்தின் கீழ் ரூ.5.91 கோடி மதிப்பீட்டில் 1968 எண்ணங்கள் தெரு விளக்கு அமைக்கும் பணியில் 1803 எண்ணங்கள் தெரு விளக்கு முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றது. மேலும், கட்டப்பட்ட மானியம் மற்றும் ஊக்க நிதியின் கீழ் (முறப்பநாடு குடிநீர் திட்டம்) ரூ.23.43 கோடி மதிப்பீட்டில் 3 எண்ணம் பணிகள் எடுக்கப்பட்டு விரைவில் மேற்கொள்ளப்பட உள்ளது.

15வது மத்தியநிதி குழு திட்டம் 2025 - 26 (கட்டப்பட்ட மானியம்)

திருநெல்வேலி மாநகராட்சியில் 15வது மத்தியநிதி குழு 2025 - 26 கட்டப்பட்ட மானியத்தின் கீழ் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் குடிநீர் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது..

ஜெர்மன் வங்கி மேம்பாட்டு நிதி உதவியுடன் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும் பணி

ஜெர்மன் வங்கி மேம்பாட்டு நிதி உதவியுடன் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு நிதியின் கீழ் இம்மாநகராட்சிக்கு சொந்தமான இராமையன்பட்டி உரக்கிடங்கு வளாகத்தில் 58.00 எம்.எல்.டி கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு அமைக்கும் பணிக்கு ரூ.93.44 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதினை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு விலைப்புள்ளி திறக்கப்பட்டு கூர்ந்தாய்வு நடைபெற்று வருகின்றது.

மூலதன மானியநிதி 2022- 23

திருநெல்வேலி மாநகராட்சியில் மூலதன மானிய நிதி 2022-23 திட்டத்தின் கீழ் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி ரூ.3.80 கோடி மதிப்பீட்டில் 2 பணிகள் எடுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது.

தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் 2023-2024

திருநெல்வேலி மாநகராட்சியில் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் 2023-2024 ன் திட்டத்தின் கீழ் ரூ.0.80 கோடி மதிப்பீட்டில் நோயாளிகளை கவனிப்பவர்களுக்கான சிறப்பு தங்குமிடம் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

தமிழ்நாடு நகர்ப்புற வேலைவாய்ப்பு திட்டம்

திருநெல்வேலி மாநகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் ரூ.0.86 கோடி மதிப்பீட்டில் 5 பணிகள் எடுக்கப்பட்டு அனைத்து பணிகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

தேசிய நகர்ப்புற சுகாதார இயக்கம் 2021-2022

திருநெல்வேலி மாநகராட்சியில் தேசிய நகர்ப்புற சுகாதார இயக்கம் 2021-2022 ன் கீழ் ரூ.1.35 கோடி மதிப்பீட்டில் 3 நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையம் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது.

தேசிய நகர்ப்புற சுகாதார இயக்கம் 2023-2024

திருநெல்வேலி மாநகராட்சியில் தேசிய நகர்ப்புற சுகாதார இயக்கம் 2023-2024 ன் கீழ் நகர்ப்புற சுகாதார துணை மையம் மற்றும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையம் கட்டும் பணிக்கு ரூ.5.10 கோடி மதிப்பீட்டில் 8 பணிகள் எடுக்கப்பட்டு 6 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 2 பணிகள் நடைபெற்று வருகின்றது.

நமக்கு நாமே திட்டம் 2022-2023

திருநெல்வேலி மாநகராட்சியில் நமக்கு நாமே திட்டம் 2022-2023 ன் கீழ் அரசு மானியம் ரூ.0.34 கோடி மற்றும் பொதுமக்கள் பங்களிப்பில் ரூ.0.19 கோடி மதிப்பீட்டில் 7 பணிகள் எடுக்கப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளது.

**அம்ரூத் 2.0 2023-2024**

திருநெல்வேலி மாநகராட்சியில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் 24 X 7 குடிநீர் விநியோக பணி ரூ.26.48 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

**தூய்மை இந்தியா திட்டம் 2.0 2022 - 23**

திருநெல்வேலி மாநகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2.0 திட்டத்தின் கீழ் சமுதாயக் கழிப்பிடம் மற்றும் பொது கழிப்பிடம் கட்டும் பணிக்கு ரூ.3.61 கோடி மதிப்பீட்டில் 42 பணிகள் எடுக்கப்பட்டு 19 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றது.

**சீர்மிகு நகர திட்டம்**

திருநெல்வேலி மாநகராட்சியில் மொத்தம் ரூ.938.15 கோடிக்கு 81 பணிகள் மேற்கொள்ள அனுமதி பெற்று ரூ.925.65 கோடிக்கு 80 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 1 பணி முடியும் தருவாயில் உள்ளது.

**பாதாளசாக்கடை திட்டம்**

திருநெல்வேலி மாநகராட்சியில் விடுபட்ட பகுதிகளில் அம்ரூத் திட்டம் 2016-17 -ன் கீழ் ஆசிய வங்கி நிதியுதவியுடன், தாமிரபரணி ஆற்றிற்க்கு மேற்கு பகுதி (பகுதி 2) ரூ.296.11 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றது. மேற்படி திட்டப் பணியானது விரைவில் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்க்கு கொண்டு வரப்பட உள்ளது.

மேலும் திருநெல்வேலி மாநகராட்சியின் பிற பகுதிகளில் பாதாளச்சாக்கடை திட்டத்தை செயல்படுத்த அம்ரூத் திட்டத்தின் கீழ் (பகுதி 3) மூன்று சிப்பங்களாக ரூ.663.92 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இப்பணியானது மார்ச் 2026 க்குள் நிறைவடையும்.

கண்காணிப்பு பொறியாளர்,
திருநெல்வேலி மாநகராட்சி.

11.6.25

## 2024-25-ஆம் ஆண்டிற்கான திருநெல்வேலி மாநகராட்சியின் ஆட்சி அறிக்கை

# வருவாய் பிரிவு

பொது வருவாய் மற்றும் வருவாய் கணக்குகளில் சொத்துவரியே பிரதான வரியாக இருந்து வருகின்றது. இப்பணியில் ஈடுபட்டுள்ள பணியாளர்களின் எண்ணிக்கை விபரம் கீழே மண்டலங்கள் வாரியாக கொடுக்கப்பட்டுள்ளது.

**பணியிடங்கள் :**

| பணியிடங்கள் | தச்சநல்லூர் | பாளையங்கோட்டை | மேலப்பாளையம் | திருநெல்வேலி |
|---|---|---|---|---|
| உதவி ஆணையாளர் | 1 | 1 | 1 | 1 |
| உதவி ஆணையர் (வருவாய்) | காலி பணியிடம் | | | |
| உதவி வருவாய் அலுவலர் | 0 | 1 | 0 | 1 |
| சிறப்பு வருவாய் ஆய்வாளர் | 1 | 0 | 1 | 1 |
| வருவாய் உதவியாளர்கள் (பணி ஏற்பாட்டின் கீழ்) | 5 | 6 | 6 | 4 |

**சொத்துவரி:**

சொத்துவரி அரை வருடத்திற்கு ஒரு முறை கீழ்கண்ட ஆண்டு வரி விகிதத்தில் விதிக்கப்பட்டு வருகின்றது,

| விபரம் | வரி விகிதம் |
|---|---|
| பொதுவரி | 10.50 |
| தண்ணீர் வரி | 3.00 |
| கழிப்பிட வரி | 6.50 |
| விளக்கு வரி | 2.50 |
| மொத்தம் | 22.50 |

மேற்கண்ட கூறுகளில் கல்விவரி தனியாக வருடாந்திர மதிப்பில் 2.50% கணக்கிடப்படுகிறது. சொத்துவரி நடப்பு ஆண்டு முடிவில் (2024-2025-ஆம் ஆண்டு நான்கு மண்டல பகுதிகளுக்கும் சேர்த்து ரூ.3669.47 இலட்சம் (வழக்கு கேட்பு உட்பட) நிலுவையாக உள்ளது.

காலிமனைகளுக்கு 01.10.2009 முதல் சதுரடி விகிதத்தில் அரசாணையின்படியும், மாமன்ற தீர்மானம் அடிப்படையிலும் காலிமனை வரிவிதித்து வசூல் செய்யப்பட்டு வருகின்றது.

**2024.-2025-ம் ஆண்டிற்கான கேட்பு, வசூல், நிலுவை பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.**

2024-25ம் ஆண்டில் வரி வசூல் சம்பந்தமாக DBC பணியாளர்கள் மூலம் சொத்துவரிக்கான கேட்பு அறிவிப்பு (Demand Notice) அனுப்புதல், ஆட்டோ மூலம் விளம்பரம் செய்தல், வீடு வீடாக துண்டு பிரசுரம் வழங்குதல், உள்ளூர் பண்பலை வானொலி மூலம் விளம்பரம் செய்தல், அதிக வரித்தொகை செலுத்தாமல் உள்ள நிலுவை வரிவிதிப்புதாரர்களது பெயர் பட்டியல் தயார் செய்யப்பட்டு கேட்பு அறிவிப்புகள் வழங்கி வரிவசூல் மேற்கொள்ளுதல், ஜப்தி நடவடிக்கைகளும், குடிநீர் இணைப்புகள் துண்டிப்பு மற்றும் வரியில்லா இனங்களான கடைகளை பூட்டி சீல் வைத்தல் ஆகிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டது.

**தினசரி/வார சந்தைகள்:**

திருநெல்வேலி மாநகராட்சியில் நான்கு மண்டல அலுவலகங்களிலும் கீழே கண்டுள்ளவாறு தினசரி மற்றும் வாரசந்தைகள் நடத்தப்பட்டு வருகின்றது.

1) **திருநெல்வேலி மண்டலம்:**

சீர்மிகு நகரதிட்டத்தின் கீழ் 2020ம் ஆண்டில் நேதாஜி போஸ் தினசரி சந்தையில் பழுதடைந்த பழைய கட்டிடம் முற்றிலுமாக அகற்றப்பட்டு, புதிதாக 75 கடைகள் கொண்ட கட்டிடம் கட்டப்பட்டதில், 35 கடைகள் ஏலம் விடப்பட்டுள்ளது. மீதமுள்ள 40 கடைகளுக்கு மறுஏலம் விட தொடர் நடவடிக்கையில் உள்ளது. .

மீன் சந்தை : துறை முலம் வசூல் செய்யப்படுகிறது.

2) **பாளையங்கோட்டை மண்டலம் :**

சீர்மிகு நகரதிட்டத்தின் கீழ் மகாத்மா காந்தி தினசரி சந்தையில் பழுதடைந்த பழைய கட்டிடம் முற்றிலுமாக அகற்றப்பட்டு, புதிய கடைகள் கட்டும் பணி முடிவுற்றுள்ளது. ஏல நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படவுள்ளது.

மீன்சந்தை : துறை மூலம் வசூல் செய்யப்படுகிறது.

## 3) மேலப்பாளையம் மண்டலம்

கால்நடை வார சந்தையானது மாநகராட்சி மூலம் துறை வசூல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 2024-2025 இல் ஆண்டு வருவாய் ரூ.92.28 இலட்சமாகும்.

மாநகராட்சியில் பாளையங்கோட்டை, திருநெல்வேலி மற்றும் மேலப்பாளையம் ஆகிய மூன்று மண்டலங்களில் உள்ள நவீன ஒருங்கிணைந்த ஆடறுப்பு மனைகள் தனித்தனியாக ஏலம் விடப்பட்டுள்ளது. இதன் மூலம் 2024-2025ம் ஆண்டில் மேலப்பாளையம் மண்டலத்தில் ரூ.17.66 இலட்சம், பாளையங்கோட்டை மண்டலத்தில் ரூ.13.51, திருநெல்வேலி மண்டலத்தில் ரூ.9.24, ஆக மொத்தம் ரூ.40.41 இலட்சம் வருமானம் ஈட்டப்பபட்டுள்ளது.

**பேருந்து நிலையங்கள்:**

மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட பாரத ரத்ன டாக்டர் எம்.ஜி.ஆர். பேருந்து நிலையம் "அ" பிரிவு பேருந்து நிலையமாகும். ஏற்கனவே 130 கடைகள் செயல்பட்டு வருகின்றது. கூடுதலாக சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் தரைத்தளத்தில் 19 கடைகளும், முதல் தளத்தில் 41 கடைகளும் ஆக மொத்தம் 60 கடைகள் கட்டப்பட்டுள்ளது. அதில் தரைத்தளத்தில் உள்ள 19 கடைகளும் ஏலம் விடப்பட்டுள்ளது. முதல் தளத்தில் 31 கடைகள் வணிக வரித்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முதல்தளத்தில் மீதமுள்ள 10 கடைகள் மறு ஏலம்/ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது.

மேலும் பாரத ரத்ன டாக்டர் எம்.ஜி.ஆர். பேருந்து நிலையத்திற்கு நாளொன்றுக்கு சுமார் 600 பேருந்துகள் வந்து செல்கின்றன. இப்பேருந்துகளுக்கு நுழைவு கட்டணமாக நாள் ஒன்றுக்கு, ஒரு பேருந்துக்கு ரூ.15/- வீதம், 600 பேருந்துகளுக்கு ஆண்டொன்றுக்கு சராசரியாக ரூ.33.58 இலட்சம் வசூலிக்கப்பட்டு வருகின்றது. மேலும் பயணிகள் வெயில், மழை ஆகியவைகளிலிருந்து பாதுகாத்து கொள்ளவும் அமர்ந்து இளைப்பாறி செல்லவும் இருக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஊனமுற்றோர்கள் தங்கி செல்வதற்கு ஒரு அறையும் மற்றும் தேவை ஏற்படும் சமயம் இலவச மருத்துவ சிகிச்சையும் செய்யப்பட்டு வருகிறது. தாய்மார்களுக்கான பாலூட்டும் அறை ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற்போது மேற்படி பேருந்து நிலையம் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் புனரமைப்பு செய்யப்பட்டு 2021-2022-ல் (08-12-2021) திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

பாளையங்கோட்டை பேருந்து நிலையத்தில் நவீன கழிப்பிடம் மற்றும் குளியலறை ஒன்றும் பராமரிக்கப்பட்டு வருகின்றது. தற்போது மேற்படி பேருந்து நிலையம் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் புனரமைப்பு செய்யப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டு செயல்பட்டு வருகிறது. இப்பேருந்து நிலையத்தில் புதியதாக தரைத்தளத்தில் 14 கடைகளும், முதல் தளத்தில் 16 கடைகளும் ஆக மொத்தம் 30 கடைகள் கட்டப்பட்டுள்ளது. அதில் தரைத்தளத்தில் உள்ள 13 கடைகளும், முதல் தளத்தில் 10 கடைகளும் ஏலம் விடப்பட்டுள்ளது. மீதமுள்ள கடைகள் மறுஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது. மேலும் சுற்றுப்பகுதி மாணவ/மாணவிகள் பயன்பெறும் வகையில், போட்டித் தேர்வில் கலந்து கொள்ளும் மாணவ/மாணவியருக்கு குளிரூட்டப்பட்ட படிப்பகம் (Study Hall) ஒன்றும் இயங்கி வருகிறது.

**வாகன காப்பகம் :**

திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். பேருந்து நிலையத்தில் இரண்டு, மூன்று மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துவதற்கான வாகன காப்பகம் **(Multi level Car parking)** செயல்பட்டு வருகின்றது. மேற்கண்ட வாகன காப்பகத்தில் நிறுத்தப்படும் வாகனங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூலிக்கும் பணி மாநகராட்சி மூலம் **Smart Card** முறையில் துறை மூலம் வசூலிக்கப்பட்டு வருகின்றது. இம்முறையில் வாகன காப்பகத்தினுள் வரும் வாகனங்கள் குறித்த விபரங்கள் கணினியில் பதிவு செய்யப்பட்டு வாகன உரிமையாளர்களுக்கு பதிவுகள் மேற்கொண்டமைக்கான மின்னணு அட்டை வழங்கப்படுகின்றது. வாகனம் வெளியேறும் பொழுது மின்னணு அட்டை வாயிலாக வாகன காப்பகத்தில் வாகனம் நிறுத்தப்பட்ட கால அளவு கணக்கிடப்பட்டு தொகை வசூல் செய்யப்படுகின்றது. தற்போது மேற்படி பேருந்து நிலையம் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது. 2024-25-இல் ஈட்டப்பட்ட வருவாய் ரூ.139.63 இலட்சமாகும்.

தச்சநல்லூர் மண்டலம் த.மு. சாலையில் புதியதாக கட்டப்பட்டுள்ள இருசக்கர வாகன காப்பகம் ரூ.55.00 இலட்சத்திற்கு ஏலம் விடப்பட்டு வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

பாளை பேருந்து நிலையம் அருகில் புதியதாக இருசக்கர வாகன காப்பகம் கட்டி முடிக்கப்பட்டு ஏலம் விட நடவடிக்கையில் உள்ளது.

**வருவாய் வரத்தக்க இனங்கள் :**

இம்மாநகராட்சியில் பாளையங்கோட்டை மண்டலத்தில் பாளை பேருந்து நிலையம் அருகில் ஒரு திருமண மண்டபமும், மகாராஜநகரில் ஒரு திருமண மண்டபமும் உள்ளது. இதில் மகாராஜநகர் பகுதியல் உள்ள திருமண மண்டபத்தில் புனரமைப்பு பணி முடியும் தருவாயில் உள்ளது. பாளை பேருந்து நிலையம் அருகில் உள்ள திருமண மண்டபம் பயன்பாடற்ற நிலையில் உள்ளது.

பாளை மண்டலத்தில் பல்நோக்கு கூட்டரங்கம் (Multi Speciality Centre) ஏலம் விடப்பட்டு செயல்பட்டு வருகிறது. 2024-25ம் ஆண்டில் ரூ.32.00 லட்சம் வருவாய் கிடைக்கப் பெற்றுள்ளது.

மேலப்பாளையம் மண்டலத்தில் ஒரு திருமண மண்டபம் பராமரிக்கப்பட்டு வருகிறது. இம்மண்டபத்தின் மூலம் 2024-2025ம் ஆண்டில் வாடகையாக ரூ.4.00/- இலட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது.

**அங்காடிக் கடைகள்**

**தச்சநல்லூர் மண்டலம்**

1 சிந்துபூந்துறை சாலையில் உள்ள கடைகள்

2 மதுரை ரோடு கடைகள் (ம) டவுண் ரோடு கடைகள்

**பாளையங்கோட்டை மண்டலம் :**

1 பாளை பேருந்து நிலைய கடைகள்

2. மகாராஜாநகர் கடைகள்

3. மனகாவலம் ஆஸ்பத்திரி வளாகத்தில் உள்ள கடைகள்

4. சீவலப்பேரி ரோட்டில் உள்ள கடைகள்

5. தெற்கு பஜார் கடைகள்.

**மேலப்பாளையம் மண்டலம்:**

1. அலுவலக வளாகம் முன்பு மற்றும் எதிர்புறம்

2 அலுவலக வளாக வலது புறம் (நேருஜி சாலையில்)

3. அண்ணா வீதி கடைகள்

4. மேலப்பாளையம் புதிய பேருந்து நிலையத்தில் ஏற்கனவே கடைகள் (128+2 ) உணவு விடுதிகள் உள்ள நிலையில் தற்போது சீர்மிகு நகர திட்டத்தின்கீழ் புதியதாக 60 கடைகள் கட்டப்பட்டுள்ளது.

**திருநெல்வேலி மண்டலம்**

1. டவுண் தெற்கு மாட வீதி கடைகள்

**நவீன கட்டண கழிப்பிடங்கள் :**

**1) தச்சநல்லூர் வார்டு அலுவலகம்**

| | | |
|---|---|---|
| 1) நயினார்குளம் ரோடு | : | 1 |
| 2) த.மு.சாலை | : | 1 |
| 3) பெரியார் பேருந்து நிலையம் | : | 2 |

**2) பாளையங்கோட்டை வார்டு அலுவலகம்:**

| | | |
|---|---|---|
| 1) பாளை பேருந்து நிலையம் | : | 1 |
| 2) மகாத்மா காந்தி தினசரி சந்தை (காவலர் குடியிருப்பு பகுதி) | : | 1 |
| 3) மகராஜாநகர் அங்காடி கடைகள் | : | 1 |
| 4) சமாதானபுரம் போலீஸ் கன்ட்ரோல் அருகில் | : | 1 |
| 5) அம்பேத்கார் காலணி | : | 1 |

**3) மேலப்பாளையம் வார்டு அலுவலகம்:**

| | | |
|---|---|---|
| 1) புதிய பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம் | : | 5 |
| 2) இலவச கழிப்பிடம் | : | 1 |

**4) திருநெல்வேலி வார்டு அலுவலகம் :**

| | | |
|---|---|---|
| 1) சேர்மாதேவி சாலை (செக்கடி) | : | 1 |
| 2) பாறையடி | : | 1 |
| 3) போஸ் மார்க்கெட் கழிப்பிடம் | : | 1 |
| 4) கூலக்கடை பஜார் | : | 1 |
| 5) ரயில்வே பீடர் ரோடு, டவுண் | : | 1 |
| 6) கண்டியப்பேரி உழவர் சந்தை | : | 1 |
| 7) வடக்கு மவுண்ட் சாலை | : | 1 |

இந்த கட்டண கழிப்பிடங்கள் மூலம் ஆண்டொன்றிக்கு ரூ.114.98 இலட்சம் வருவாய் கிடைத்துள்ளது,

**கல்வி நிறுவனங்கள் வரிவிதிப்பு :**

திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதிகளில் தனியார் மற்றும் சுயநிதி கல்வி நிறுவன கட்டிடங்கள் மற்றும் அரசு அனுமதி பெற்று சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் கல்வி நிறுவன கட்டிடங்கள் மீது சொத்துவரி விதிக்க தமிழ்நாடு அரசிதழ் எண் 33, நாள் 25.01.2018-ல் சட்ட திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக திருநெல்வேலி மாநகராட்சி, மாமன்ற தீர்மானம் எண் 6, நாள் 13.04.2018-ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் கோரப்பட்டு பின்னர் மாவட்ட அரசிதழிலில் வெளியிடப்பட்டு கல்வி நிறுவனங்களுக்கு சொத்துவரி விதிக்கப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகின்றது.

**தொழில் வரி :**

திருத்தம் செய்யப்பட்ட தொழில் வரி மத்திய அரசு, மாநில அரசு ஊழியர்களுக்கும் அரசு சார்ந்த மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கும் திருநெல்வேலி மாநகராட்சி எல்லைக்குள் தொழில் நடத்துபவர்கள், வியாபார நிறுவனங்கள் ஆகியவற்றிக்கும் மற்றும் அதில் பணிபுரியும் பணியாளர்களுக்கும் 01.10.2018 முதல் கீழ்க்காணும் விபரப்படி தொழில்வரி செலுத்தும் நடைமுறை இருந்து வருகிறது.

| வ.எண் | சராசரி ஆறு மாத வருமானம் | 01.10.2018 முதல் திருத்தியமைக்கப்பட்ட தொழில்வரி (அரையாண்டு ஒன்றுக்கு) |
|---|---|---|
| 1 | ரூ.20000 வரை | இல்லை |
| 2 | ரூ.20001 முதல் ரூ.30000 வரை | ரூ.165/- |
| 3 | ரூ.30001 முதல் ரூ.45000 வரை | ரூ.405/- |
| 4 | ரூ.45001 முதல் ரூ.60000 வரை | ரூ.800/- |
| 5 | ரூ.60001 முதல் ரூ.75000 வரை | ரூ.1195/- |
| 6 | ரூ.75001 மற்றும் அதற்கு மேல் | ரூ.1250/- |

19/06

உதவி ஆணையாளர் (வருவாய்),
திருநெல்வேலி மாநகராட்சி.

19/6/25
A1 D/c